டெரிக் பிரின்ஸ்

பூரண இரட்சிப்பு

அதைப் பெறுவது எவ்வாறு ?

Derek prince Ministries - India

''MUZHU RATCHIPPU ATHAI PERUVATHU EVVARU''

This book was compiled from the extensive archive of Derek Prince's unpublished materials and edited by the Derek Prince Ministries editorial team.

''COMPLETE SALVATION AND HOW TO RECEIVE IT''(Tamil)

3000/0125/LOP

Published by DPM India
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

ISBN : 978-93-92947-81-0
BK-C38-100-TAM

Derek Prince Ministries - India
www.derekprince.com/ta-in

Derek Prince
MINISTRIES INDIA

பொருளடக்கம்

முன்னுரை

நமது இரட்சிப்பு பெரிதானதும் முழுமையானதுமாகும் என்பதை வலியுறுத்த விழைகிறேன். நமக்கு அளிக்கப்பட்ட இரட்சிப்பில் தேவன் இணைத்துள்ள அனைத்தையும் இரட்சிப்பை பெற்ற பல கிறிஸ்தவர்கள் அனுபவிக்கவில்லை என நான் நம்புகிறேன். அது ஒரு சிறிய வீட்டின் ஒரு மூலையில் அவர்கள் வசிப்பதைப் போன்றது. ஆனால் உண்மையில் ஒரு மிகப்பெரிய வியப்பிற்குரிய ஒரு மாளிகைக்குள் சென்றுள்ளனர். நான் உட்பட இவ்வுலகில் உள்ள ஒரு கிறிஸ்வர்கூட இரட்சிப்பில் தேவனால் அருளப்பட்ட அனைத்தையும் முழுமையாக அனுபவித்துள்ளான் என நான் நம்பவில்லை. 1941 ஆம் ஆண்டில் நான் இரட்சிக்கப்பட்டபோது இருந்ததைவிடத் தற்போது அதிகமாக மகிழ்கிறேன் என்பதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால் நம் அனைவருக்கும் இன்னும் மிக மிக அதிகமானவை உள்ளன என்பது எனக்குத் தெரியும்

'டெரிக் பிரின்ஸ்'

01 : இவ்வளவு பெரிதான இரட்சிப்பு

எபிரெயர் 2:4ல் "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?" என்று அதன் எபிரெய எழுத்தாளர் கூறுகிறார். இது இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் அருளிய பெரிதான இரட்சிப்பு ஆகும். ஆனால், அபாயமான காரியம் அதைக்குறித்து நாம் கவலையற்றிருப்பது - இரட்சிப்புக்குள் உண்மையில் செல்லாதிருத்தல். பெரிதான இரட்சிப்பை ஒரு இறையியல் உண்மை அல்லது கோட்பாடு என்று மட்டும் ஒப்புக் கொண்டு அனுபவ வாயிலாக அதன் முழுமையை ஏற்காதிருத்தலே கவலையற்றிருத்தல் ஆகும்.

நமது இரட்சிப்பின் விரிவைப் புரிந்துகொள்ளுதல்

எபேசியர் 3:17-19ல் அப்போஸ்தலன் தேவனுடைய மக்களுக்காக இவ்வாறு ஜெபிக்கிறார்.

> *"....நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும் தேவனுடைய சகல பரிபூரணத்தால் நிறையப்படவும்...."*

"மனிதனுக்காக தேவன் உருவாக்கிய அனைத்தும் உள் அடங்கிய தொகுப்பின் வேதாகம வார்த்தையே இரட்சிப்பு ஆகும்."

ஒரு பிரம்மாண்டமான மாளிகைக்குள் நடப்பதைப் போன்று நமது பெரிய இரட்சிப்புக்குள் உட்புகுவதை படமாக எண்ணுகிறேன். அது பல்வேறு அறைகளையும் கொண்டது. நாம் பார்க்கும் போது கண்களுக்கு அது முடிவடைகிறதை நாம் காணமுடியாது. அந்த அற்புதமான மாளிகையின் நடவில் உள்ள படிக்கட்டின் உச்சியில் நிற்பதாக கற்பனை செய்யுங்கள். மேலிருந்து பார்த்தால், கீழேயுள்ள எல்லாவற்றையும் உங்களால் பார்க்கமுடியாது. இறுதியாக, கீழிருந்து மேலே நோக்கினால் உங்கள் கண்களுக்கு அப்பால்வரை அது விரிந்து காணப்படுகிறது!

பவுலின் விண்ணப்பம் நாம் உட்புகுந்த இந்த மாளிகையின் ஒரு சிறிய மூலையில் தனியாக ஒதுங்கி நிற்பதை தேவன் விரும்பவில்லை எனக் கூறுகிறது. நமது பெரிதான இரட்சிப்பின் அனைத்து பகுதிகளையும் அதன் அகலம், அதன் நீளம், அதன் ஆழம் மற்றும் அதன் உயரம் ஆகியவற்றை நோக்கிப் பார்த்து அதை சொந்தமாக்கி கொள்ளவேண்டும்.

வேதாகமம் முழுவதிலும், இரட்சிப்பு என்ற வார்த்தை பல விரிவான செயல்முறைகளைக் குறிக்கிறது. பலருக்கு அது

பாவ மன்னிப்பும், பரலோகத்திற்கு ஆயத்தமாக்கப்பட்ட ஆன்மா என்றே பொருள்படும். ஆனால் இரட்சிப்புக்கு அதை விட மிக அதிகமானவை உள்ளன.

மனிதனுக்காக தேவன் உருவாக்கிய அனைத்தும் உள் அடங்கிய தொகுப்பின் வேதாகம வார்த்தையே இரட்சிப்பு ஆகும். புதிய ஏற்பாட்டில், இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் நமக்கு அருளிய அனைத்து பலன்களையும் ஆசீர்வாதங்களையும் விவரிக்கிறது. பாவங்கள் மன்னிக்கப்படுதல், நித்திய ஜீவன் என்ற ஈவு, குணமடைதல், வேறுபட்ட வாழ்க்கை வாழ வல்லமை, இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் வழங்கப்படுதல், சர்வ வல்லமையுள்ள கடவுளின் சந்நிதானத்தில் நித்தியத்தை செலவிடுவதற்கான உறுதி ஆகியவற்றை உள்ளடக்கியது.

தேவனுடைய இரட்சிப்பை நம்புவதின் முக்கியத்துவம்

சங்கீதம் 78:12-54ல் எகிப்திலிருந்து மக்களை வெளிக்கொண்டு வந்ததில், இஸ்ரவேலுடனான கர்த்தரின் செயல்பாடுகளையும், வனாந்தரத்தில் அவர்களை வழிநடத்தியதையும் விவரிக்கிறது. அது ஏன் தம் மக்களிடம் கர்த்தர் கோபம் கொண்டாரெனவும் கூறுகிறது. வழக்கமான அன்றாட மொழியில், தம்மையும் தமது இரட்சிப்பையும் குறித்து மிகக் குறைவாக எண்ணியதாலேயே தேவன் சினமடைந்தார். (இதுபோலவே, அவர் தந்தருளிய இரட்சிப்பைக் குறித்து

மிகக்குறைவாக மதிப்பிடுவதால் தேவனைத் துக்கப்படுத்துகிறோம் என நான் நம்புகிறேன்.)

இப்பகுதியை நீங்கள் ஆராயும் போது, பஸ்கா ஆட்டுக்குட்டியை பலியிட்டு எகிப்திலிருந்து விடுதலையாகி தங்கள் சுதந்திரத்திற்குள் செல்லும்வரை தேவன் அருளிய ஒவ்வொரு ஆசிர்வாதத்திற்கும், தேவைகளை சந்தித்ததற்கும் பயன்படுத்தப்பட்ட எல்லாம் உள்ளடக்கிய வார்த்தை இரட்சிப்பு என்பதாகும்.

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் தேவனின் நியாயத்தீர்ப்பிலிருந்து பாதுகாப்பு, சிவந்த சமுத்திரத்தின் வழியாக இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் செல்லுதல், மேகத்தின் ரூபத்தில் வந்த தேவபிரசன்னம், வானத்திலிருந்து மன்னாவினால் அனுதினமும் போஷிக்கப்படுதல், கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வருதல் போன்றவை அடங்கியுள்ளன.

இருப்பினும், தேவன் செய்த இந்த அற்புத செயல்களைக் கண்டும் மக்கள் பாவம் செய்து, வனாந்திரத்தில் கலகம் பண்ணி, தங்கள் இருதயங்களில் பரீட்சை பார்த்து, அவருக்கு விரோதமாகப் பேசினார்கள் (வசனங்கள் 17-20) வசனங்கள் 21-22 கூறுகின்றன.

> *''ஆகையால் கர்த்தர் அதைக் கேட்டுக் கோபங்கொண்டார்; அவர்கள் தேவனை விசுவாசியாமலும், அவருடைய இரட்சிப்பை*

நம்பாமலும் போனதினால்; யாக்கோபுக்கு விரோதமாய் அக்கினி பற்றியெரிந்தது; இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கோபம் மூண்டது"

ஒவ்வொரு நாளும் 3 மில்லியன் மக்களுக்கு உணவளிக்க என்னவேண்டுமென எண்ணிப் பார்த்ததுண்டா? பல ஆண்டுகளுக்குமுன் 3 மில்லியன் மக்களுக்குத் தேவன் தண்ணீரையும் உணவையும் எடுத்தச் செல்லும் ரயிலின் படக்காட்சியை நான் பார்த்தேன். அந்த ரயில் மிகவும் நீளமாக இருந்தது - அதுவும் ஒரே ஒரு நாளுக்காக மாத்திரம்!. தேவன் வனாந்திரத்தில் 40 ஆண்டுகள் உணவளித்தார். இந்த பங்கீடு அனைத்தும் அவர்கள் இரட்சிப்பில் உள்ளடங்கியது.

மேலும், அவர்களது காலணிகள் தேய்ந்து போகவில்லை என்பதும் அவர்கள் ஆடைகள் பழையவைகளாகப் போகவில்லையென்ற உண்மையும் இதில் அடங்கும். அவர்கள் உடல்நலமின்றியிருந்த போது தேவன் சுகமளித்தார். பகலில் வெயிலின் வெப்பத்தினின்று மேகத்தினாலே மூடினார்; இரவின் குளிரிலே அக்கினியின் மூலம் வெப்பம் தந்தார். தேவனின் மொத்த ஒதுக்கீடும் இரட்சிப்பு என்ற ஒரே சொல்லில் வசனம் 22ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (எபிரேய மொழியில் அது யெசுவா). அனாலும், அவரது இரட்சிப்பின் விரிவாக்கத்தை அவர்கள் உணராததால் தேவன் வருத்தமடைந்தார்.

மேலும் வசனம் 41ல் அவர்கள் திரும்பி தேவனை பரீட்சை பார்த்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள்.

என்னுடைய அறிவில் இரட்சிப்பின் அளவைக் குறித்து தேவனை பலமுறை குறைவாக எண்ணியுள்ளேன். எனக்கு ஒரு தேவை இருக்கும்போது எனக்குள் நினைப்பேன், ‘‘உண்மையிலே அந்த தேவையை சந்திக்க தேவனை நம்பலாமா ?” கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் தேவனால் செய்யக்கூடியவற்றிற்கு எல்லைகளைக் குறிக்கின்றார்கள். இவை வேதத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட எல்லைகள் அல்ல; தேவனின் இரட்சிப்பு எவ்வளவு இருக்குமென நமது கற்பனையே, குறைவாக இருக்கிறது. இது கர்த்தரைத் துக்கப்படுத்துகின்றதென்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இஸ்ரவேலர் தேவனால் என்ன செய்ய முடியுமென வரையரைகள் வைத்தபோது, அது அவரை விசனமடையச் செய்தது. ஆகவே, தேவனால் செய்ய முடிந்ததற்கு எல்லைகள் வைக்கமாட்டோம் என்று மனதில் உறுதி எடுத்துக்கொள்வோம். அதற்குப் பதிலாக, தேவன் அருளிய எல்லாம் அடங்கிய மொத்தமான இரட்சிப்பில் நம்பிக்கை வைப்போம்.

இயேசு கிறிஸ்தவின் பரிபுரண பலி

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் முடிவுற்ற செய்கையைக் குறித்து எபிரெயர் **10:14** கூறுகிறது:

> *“ஏனெனில், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களான ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் புரணப்படுத்தியிருக்கிறார்”*

அனைத்து மனித வர்க்கத்திற்காகவும் தேவனால் முன்குறிக்கப்பட்ட பலி அவரது மரணமாகும்.

ஆப்பிரிக்க மாணவர்களுக்கு ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக நான் பயிற்றுவித்தபோது, ஆங்கிலத்தில் உள்ள கால உருபுகளின் முக்கியத்துவத்தை அவர்களுக்குப் போதிக்க வேண்டியிருந்தது. காலத்தைக் குறிக்கும் வினைச் சொல்லின் ஒரு கூறே கால உருபு ஆகும். இந்த வசனத்தில் இரு கால உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை மிக முக்கியமானவை முதலில் உள்ள "Perfect tense" கடந்த கால வினைச்சொல் என்றழைக்கப்படுகிறது. அது, "ஏனெனில் ஒரே பலியினாலே அவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்," என்று கூறுகிறது.

"இயேசுவின் கிரியை பூரணமானது, ஆனால் அதை நாம் கையகப்படுத்துவது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும்."

பாவத்தை எடுத்துப் போட இயலாத பலிகளை எப்படி ஒவ்வொரு நாளும், மீண்டும் மீண்டும் பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் செலுத்தி ஊழியம் செய்கிறார்களென எபிரெயர் எழுத்தாளர் விவரித்துள்ளார். ஆனால் இயேசுவைக் குறித்து பேசும்போது ''இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து. (வசனம் 12)"

தொடர்ந்து நின்றுகொண்டு ஊழியம் செய்த ஆசாரியருக்கும், தன்னுடைய ஒரே பலியைச் செலுத்தி உட்கார்ந்த இயேசுவுக்குமே உள்ள வேறுபாடு இதுதான். அவர் ஏன் உட்கார்ந்தார் ? அவர் மீண்டும் வேறு ஒரு பலியைச் செலுத்தப் போவதில்லை. ஒரே ஒருமுறை நித்தியத்திற்காக செய்துமுடித்தார். ஆனால் பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களின் வேலை ஒரு போதும் முடிவடையவில்லை. ஏனென்றால் அவர்களின் பலிகள் பாவ சிக்கலைத் தீர்ப்பதில்லை. இயேசுவின் கிரியை முழுமையானது. அதனோடே ஒன்றையும் கூட்ட வேண்டியதில்லை. அதிலிருந்து ஒன்றையும் எடுக்கவும் முடியாது. அது நித்தியமானது. அதனால்தான் "Perfect tense" பயன்படுத்தப்பட்டது.

இயேசுவின் கிரியையைத் தங்களுக்கு உரியதாக மாற்றிக் கொள்பவர்களை, எபிரெயர் எழுத்தாளர், "பரிசுத்தமாக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்", என்று அழைக்கிறார். அதைத்தான் நாம் தொடர் நிகழ்காலம் என்று கூறுகிறோம். நாம் பரிசுத்தமாக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறோம். இவ்வாறு, பரிசுத்தமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது, தேவனுக்காக மேலும் அதிகமாகப் பிரித்தெடுக்கப்படும் போது, தேவனிடத்தில் கிட்டிச் சேரும்போது, அவருடைய கிரியைகளையும் வாக்குத்தத்தங்களையும் அதிகமாக நமக்கு சொந்தமாக்கி கொள்ளும்போதும், இயேசு கிறிஸ்துவின் ஒரே பலியினால் பெறுபவற்றில் மேலும் மேலும் முழுமையாக உள்ளே செல்லுகிறோம்.

நான் போதகராவதற்கு முன் தத்துவஞானியாக இருந்தேன். வேதாகமம் மட்டுமே மனித சிக்கல்களின் காரணங்களை நன்கு ஆராய்ந்து துல்லியமான தீர்வுகளைத் தருகிறது எனக் கண்டுகொண்டேன். அந்த காரணம் ஒரே வார்த்தையில் பாவம் என்பதாகும். வேதாகமத்தைத் தவிர, வேறு எந்த புத்தகமும் பாவத்தின் தன்மையையும் விளைவுகளையும் விவரிப்பதில்லை. அதற்கான தீர்வையும் கூறுவதில்லை எந்த சிக்கலையும் நமது சொந்த மூளை அறிவினாலோ அல்லது பலத்தினாலோ சந்திக்க முற்பட்டால், அது நம்மை தோற்கடிக்கும்.

பாவத்திற்குத் தீர்வு பலி ஒன்றேயாகும். முதலிலிருந்து இறுதி வரை இதுதான் வேதாகமத்தின் செய்தியாகும். எங்கெல்லாம் பாவம் இருக்கின்றதோ, அங்கு பலி இருப்பது இன்றியமையாதது. பழைய ஏற்பாட்டின் பலிகள் அனைத்தும் சிலுவையில் நமக்காக இயேசு கிறிஸ்து செலுத்திய எல்லாமடங்கிய ஒரே மகிமையான இறுதி பலியின் முன்னடையாளங்கள் (நிழல் அல்லது மாதிரியாகும்).

அவர் இறப்பதற்குமுன், இயேசுவின் வெற்றி முழக்கம், "எல்லம் முடிந்தது!" என்பதாகும். கிரேக்க புதிய ஏற்பாட்டில் இது கடந்தகால உருபு பூரணத்தைக் குறிக்கின்றது. என்னுடைய கணிப்பு இயேசுவின் பலி பூரணத்தில் முழுமையான முழுமையாகும் என்பதே. ஆனால் அந்த பலியை நமக்கு சொந்தமாக்கிக் கொள்வது ஒரு தொடர் நிகழ்வாகும்.

மறுபிறப்பும் இரட்சிப்பும்

மறுபிறப்பிற்கும் இரட்சிப்புக்கும் ஓர் முக்கிய வேறுபாட்டை நாம் உண்டாக்க வேண்டும். மறுபிறப்பைக் குறித்து பேசும்போது யோவான் **1:11-13**ல் இயேசு கூறினார்.

> *அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார் (இடம் அல்லது வீடு) அவருக்குச் சொந்தமானவர்களோ (மக்களோ) அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.*

பின்னால்வரும் ஆனால் என்ற வார்த்தைக்காக ஸ்தோத்திரம். இது முடிவு அல்ல! (வேதத்தில் பல ஆச்சரியமான ஆனால் என்ற வார்த்தை வரும் இடங்கள் உள்ளன. (உதாரணமாக ரோமர் **6:23**-ஐ பார்க்கவும்)

> *அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.*

தேவனாலே பிறத்தல் மறு(புது) பிறப்பு ஆகும். தெருகூட்டங்களில், குறிப்பாக லண்டன் மாநகரத்தில், நூற்றுக்கணக்கான மக்களை இந்த மறுபிறப்புக்குள் வழிநடத்த எனக்கு சிலாக்கியம் கிடைத்தது. நான் அவர்களிடம் கூறினேன் நீங்கள் மறுபடியும் பிறக்க விரும்பினால் நீங்கள்

செய்ய வேண்டிய ஒன்று இருக்கிறது. அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது தான் மறுபிறப்பிற்கான திறவுகோல். இயேசுவை ஏற்றுக் கொள்ளுதல் - வேதம் கூறுகிறது "அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ". நீங்கள் தனிப்பட்ட முறையில் உங்கள் இதயத்தைத் திறந்து கொடுத்து கர்த்தரை வரவேற்க வேண்டும். அவர் மேலும் கூறுகிறார் இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் நான் உட்பிரவேசித்து (வெளிப்படுத்தல் 3:20) இயேசுவை உள்ளே வரவேற்றால், அவர் தமது வாக்கை நிறைவேற்றி, உள்ளே வந்து விட்டாரென்று மக்களுக்கு உறுதி செய்வது எவ்வளவு ஆசீர்வாதம்.

"நமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை எவ்வளவு பயன்படுத்தகிறோமோ அதை பொறுத்து நாம் எப்படி இருப்போம் என்பதாகும்."

மறுபிறப்பு ஒருதடவை ஏற்படும் அனுபவம். ஒரு மனிதன் இரண்டு தடவை மறுபிறப்படைய அவசியமில்லை. தேவனின் பிள்ளைகளாகும், அதிகாரத்தை நாம் பெறுகிறோம் என ஒருவகையில் கொள்ளலாம். ஆனால் பயன்படுத்தாத அதிகாரம் வீணாக இருக்கிறது. நமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை எவ்வளவு பயன்படுத்துகிறோமோ அதை பொறுத்து நாம் எப்படி இருப்போம் என்பதாகும்.

நான் ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்தபோது, ஒரு ஆப்பிரிக்கரின் மனநிலை, "அதைக் கேட்பதில் தவறில்லை" என்பதாக இருக்கிறது. ஒரு ஆப்பிரிக்கரிடம் ஒரு ஜோடி பாதரட்சைகளைக் கொடுத்தால் அவன் கூறுவான், "நன்றி! ஆனால் கால் உறைகள் எங்கே ?" கேட்பதினால் ஏதாவது பெறமுடியும் என்று எண்ணினால், அவன் எப்போதும் வந்து அதைக் கேட்பான். ஆகவே சகாரா ஆப்பிரிக்காவில் கூட்ட இறுதியில் அழைப்பு கொடுக்கும்போது மக்களை முன்வரச் செய்வது கடினமல்ல. மாறாக, அவர்களை நிறுத்துவது தான் கடினம்! இயேசுவை ஏற்றுக்கொள்ள அவரைக் கேட்டபின், தொடர்ந்து அவரிடம் கேட்டுக் கொண்டே இருக்க அவசியமில்லை என்ற உண்மையைக் கற்பிக்க மிகவும் போராட வேண்டியிருந்தது. அவர் உள்ளே வந்து விட்டார்! அவரைப் பெற்றுக் கொண்டார்கள் என்ற உண்மையை அவர்கள் அறிந்து, மறுபடியும் அழைப்பிற்கு முன்னே வராமல் இருந்ததே பெரிய வெற்றியாகும்.

மறுபிறப்பிற்கு மாறாக, இரட்சிப்பு ஒரு தொடர் நிகழ்வாக இருக்கிறது. அது ஒரு தடவை வரும் அனுபவமல்ல. நீங்கள் மறுபடி பிறந்திருக்கலாம். ஆனால், இரட்சிப்பில் எவ்வளவு தூரம் உள்ளீர்கள் ? இரட்சிப்பு மூன்று காலங்களிலும் கூறப்படுகிறது. இறந்த முடிவுற்ற காலம், இறந்த காலம், தொடரும் நிகழ்காலம்.

எபேசியர் 2:8 கூறுகிறது: "கிருபையினாலே விசுவாசத்தைக்

கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்," அது முடிவுற்ற இறந்த காலமாகும். அதை அப்படியே மொழிபெயர்த்தால் விசுவாசத்தால் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுவிட்டீர்கள். அது முடிவுற்றது.

தீத்து 3:5 சொல்கிறது: "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே நம்மை இரட்சித்தார். அது சாதாரண இறந்தகாலம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் கர்த்தர் என்னை இரட்சித்தார்: ஜீலை 1941இல் ஒரு வெள்ளிக்கிழமை நடு ராத்திரியில். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் தேவனின் இந்த அளிப்பை நாம் தனிப்பட்ட முறையில் பெறுகிறோம்.

1 கொரிந்தியர் 1:18ல் தொடர் நிகழ்காலத்தைப் பார்க்கிறோம். "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது."

இந்த தொடர் நிகழ்காலம் தொடர்ந்து இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நாம் எனப் பொருள்படும். ஒரு தடவை நிகழ்ந்த அனுபவத்தினால் நான் இரட்சிக்கப்பட்டேன் என்று நாம் சொல்லலாம். அந்த ஒரு அனுபவத்தின் வாயிலாக ஏற்கனவே முடிவுற்ற இரட்சிப்பிற்குள் உட்புகுந்துள்ளோம். இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதே சமயத்தில், அந்த இரட்சிப்பு தொடர்ந்து நம்மில் கிரியை செய்கிறது. நாம் தொடர்ந்து இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இது குறித்த விரிவான எடுத்துக்காட்டு நோவாவின் பேழையாகும். பழைய ஏற்பாட்டில் இரண்டு முக்கிய பேழைகள் உள்ளன, நோவாவின் பெரிய பேழை; மோசேயின் சிறிய பேழை. அவை இரண்டும் கிறிஸ்துவின் படங்கள், பெரிய பேழை கிறிஸ்துவில் என்னைக் குறித்து பேசுகிறது. அந்த சிறிய பேழை கிறிஸ்து என்னில் இருப்பதைக் குறித்து பேசுகிறது. நோவாவின் பெரிய பேழையைப் பார்க்கும் போது, இரட்சிப்பு பேழைக்குள் உட்புகுவதால் வந்தது. ஒரு காலகட்டத்தில், நோவாவும் அவன் குடும்பமும் பேழைக்குள் புகுந்து இரட்சிப்படைந்தார். பேழை முழுமையாகவும் பரிபூரணமாகவும் இருந்தது. தேவனுடைய சரியான அறிவுரைகளின் படி கட்டப்பட்டது. அது பழுது பார்க்கப்படவில்லை! அதை சரிசெய்யவோ அல்லது மேம்படுத்தவோ அல்லது திரும்பப் பெறவோ இல்லை. அது பரிபூரணமாக வேலை செய்தது! அது வேலை செய்ததற்காகத் தேவனுக்கு நன்றி! இல்லாவிடில் அதுகாலங்கடந்த செயலாக மாறியிருக்கும். அவர்கள் பேழைக்குள் உட்புகுந்த அந்த விநாடியே பரிபூரண இரட்சிப்புக்குள் உட்புகுந்துவிட்டனர். ஆனால், பேழைக்குள் இருந்தகாலம் முழுவதும், அவர்களைச் சுற்றி அலைவுப்பட்ட தண்ணீர்களிலிருந்து அந்த பேழை தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டேயிருந்தது.

02 : புதிய ஏற்பாட்டில் “இரட்சிப்பு" சொல்லின் பயன்பாடு

எனக்குத் தெரிந்த வரை, எந்த ஒரு வேதாகம மொழி பெயர்ப்பிலும் வெளிவராத ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். புதிய ஏற்பாட்டில், இரட்சிப்பு என்பதற்கு ஒரு கிரேக்க சொல் உண்டு அது சோஜோ (Sozo) ஆகும். சோஜோ என்ற கிரேக்க சொல் பல இடங்களில் "இரட்சிப்பு" அல்லது "இரட்சிக்கப்பட்டேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் வேறுபகுதிகளில் "குணமாக்கப்பட்டீர்கள்", நன்றாக மாறுதல், "முழுமையாக்கல்", "பாதுகாப்பு" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த மொழிபெயர்ப்புகள், இவை இரட்சிப்பு என்பதையே சுட்டிக் காட்டுகிறது என்ற உண்மையை மறைக்கின்றன.

இதைவிளக்க, சோஜோ என்ற கிரேக்க சொல் இரட்சிப்பைக் குறிக்கிறது என்பதை, கிரேக்க மொழிக்கும் நமக்கும் தொடர்பு வாய்ப்பு இல்லாதபோது அறியமுடியாது என்பதை புதிய ஏற்பாட்டிலிருந்து ஏழு எடுத்துக்காட்டுகளைக் காட்டுகிறேன்.

மத்தேயு 14:35-36

> *அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில்*

கொண்டு வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாக வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்.

இயேசுவின் ஊழியத்தில் ஒரு பகுதி இது. கிரேக்கம் என்ன சொல்கிறதென்றால் முற்றிலுமாக இரட்சிக்கப்பட்டார்கள் அல்லது முழுவதுமாக குணமானார்கள். கிரேக்கத்தில் சோஜோ என்ற வார்த்தைக்குமுன் "முழுவதும்" என பொருள் உள்ள "டயா" என்ற வார்த்தை இருக்கிறது, அது முற்றிலுமாக என்ற அர்த்தத்தில் உள்ளது. ஒவ்வொரு நபரும் அற்புதமாக சுகமாக்கப்பட்டார்கள் அல்லது முற்றிலும் இரட்சிக்கப்பட்டார்கள். வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமென்றால், குணமாக்கப்படுதல், இரட்சிப்புக்கு கூடுதலானது அல்ல, இரட்சிப்பின் ஒரு பகுதியாகும். மனித உடலுக்கு பயன்படுத்தப்படும் இரட்சிப்பே அது.

லூக்கா 8:36

லூக்கா **8:26-37**ல் முழுவதுமாக பிசாசினால் ஆட்கொள்ளப்பட்ட "கதரேன பிசாசு" பிடித்தவன் என்றழைக்கப்படும் மனிதனின் வரலாறு கொடுக்கப்படுகிறது. அவன் எந்த உடையும் அணியாமல், கல்லறைகளில் வசித்து, தன்னைத் தானே கீறிக்கொண்டு இரவும் பகலும் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தான். இயேசு வந்தபோது, ஒரு மிகப்பெரிய குறிப்பிடத்தக்க ஒன்றைச் செய்தான்: இயேசுவின்

முன் விழுந்து பணிந்து கொண்டான். (மாற்கு 5:6) அசுத்த ஆவிகளிடமிருந்து விடுதலைப் பெற மக்களுக்கு உதவும் எனது ஊழிய அனுபவத்தில், இயேசுவுக்கு முற்றிலும் ஒப்புக்கொடுக்க அவர்கள் மனமுள்ளவர்களாக வேண்டும்; இல்லாவிடில் அதற்கு உகந்தவர்கள் அல்ல. அவன் இயேசுவிடம் வந்தான். அவன் இதயத்தில் தன்னைக்குறித்த வாஞ்சையுள்ளவன் என்று இயேசு கண்டார் இயேசு அவன் பெயரைக் கேட்டார்; நாங்கள் அநேகராயிருப்பதால் லேகியோன் என அவனுக்குள்ளிருந்த பிசாசுகள் கூறின. அந்த பிசாசுகள் வேண்டிக்கொண்டன எங்களைப் பாதாளத்துக்கு அனுப்பாதேயும் அருகிலிருந்த பன்றி கூட்டத்திற்குள் செல்ல அனுமதிக்கேட்டன. இயேசுவும் அதை அனுமதித்தார்.

"குணமாக்கப்படுதல், இரட்சிப்புக்கு கூடுதலானது அல்ல, இரட்சிப்பின் ஒரு பகுதியாகும்."

இயேசு ஏன் அவ்வாறு செய்தார் என்பது குறித்து பல யூகங்கள் உள்ளன. ஆனால் அந்த பிசாசுகள் ஒப்புக் கொள்ளாமல் அவனை விட்டுச் சென்றிருந்தால் பல விபரீத கடும் விளைவுகள் ஏற்பட்டிருக்கும். அதனால் இயேசு அவற்றிற்கு ஒரு போக்கை வைத்தார்; அதை அவை ஒப்புக் கொண்டன. அந்த பன்றிகள் மேட்டிலிருந்து கடலுக்கு ஓடி கடலில் மூழ்கின.

ஒரு மனிதன் இத்தகைய பிசாசின் வல்லமையில் இருந்து அதைக் கட்டுக்குள் வைத்திருந்தாலும், அதே பிசாசுகள் 2000 பன்றிகளை அழிக்கக் கூடியதாக இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. அது மனித ஆள்தத்துவத்தின் வல்லமையைக் குறித்த கருத்தை அளிக்கின்றது. பல சமயங்களில் மற்றவர்களின் சரிதையைக் கேட்கும்போது இந்த உள்ளான போராட்டத்துடன் எவ்வாறு ஒரு மனிதன் வாழ்ந்தார் என்பது என்னை விஞ்சி அடக்குவதாயுள்ளது.

பன்றிகளை மேய்த்தவர்கள் ஊருக்குள் சென்று கூறினார்கள்.

> *"அப்பொழுது, சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு, இயேசுவினிடத்தில் வந்து, பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் வஸ்திரந்தரித்து, இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள். பிசாசுகள் பிடித்திருந்தவன் சொஸ்தமாக்கப்பட்டதைக் கண்டவர்களும் அதை அவர்களுக்கு அறிவித்தார்கள்."*
>
> *லூக்கா 8:35-36*

அந்த வார்த்தை இரட்சிக்கப்பட்டேன் என்ற சோஜோ ஆகும். இவ்வாறு பிசாசுகளிலிருந்து விடுதலை இரட்சிப்புக்குக் கூடுதலாக அல்ல. அது இரட்சிப்பின் ஒரு பகுதியே ஆகும்.

லூக்கா 8:48

இயேசு கலிலேயா கடலின் அக்கரைக்குத் திரும்பினார்.

அப்போது பெரும்பாடுள்ள ஒரு பெண் மக்கள் கூட்டத்தின் மத்தியிலே அவரைத் தொட்டாள். இயேசு யாரோ ஒருவர் அவரைத் தொட்டதை அறிந்து "என்னைத் தொட்டது யார்?" என்று கேட்டார். அதை ஒப்புக்கொள்ள அந்த பெண் பயந்தாள். ஏனெனில் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் படி உதிர ஊறல் உள்ள எந்த பெண்ணும் சடங்காசாரத்தின்படி அசுத்தமானவள். அவள் யாரையும் தொட அனுமதி இல்லை. ஆனால் நம்பிக்கையற்ற நிலையில் நியாயப்பிரமாணத்திற்கு எதிராக செயல்பட்டாள். இயேசுவுக்கு நடந்தவை தெரியும் என்பதை அவள் உணர்ந்த போது, அவள் நடுநடுங்கி அவருக்கு முன் விழுந்து தான் செய்ததை அறிக்கையிட்டாள். **48**வது வசனத்தில் இயேசு கூறினார்.

> *"மகளே! திடன் கொள். உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது (குணமாக்கியது) சமாதானத்தோடேபோ"*

இவ்வாறு, உதிர ஊறலிலிருந்து விடுதலையும் இரட்சிப்பின் ஒரு பகுதி தான்.

லூக்கா 8:50

மரண வாயிலில் இருந்த யவீருவின் மகளுக்காக ஜெபிக்க இயேசு சென்று கொண்டிருந்தார். அந்த பெண் அவரைத் தாமதமாக்கினாள். யவீருவின் மகள் மரித்தாள். சில நல்ல கருத்துள்ள ஆனால் எதிர்மறையான மக்கள் யவீருவுக்கு செய்தி அனுப்பினார்கள். போதகரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்

உன் மகள் மரித்து விட்டாள்.

> *"இயேசு அதைக் கேட்டு; பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு; அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார்"*

அந்த சொல் என்ன என்று யூகித்தீர்களா? அவள் இரட்சிக்கப்படுவாள் அவளுக்கு என்ன நிகழ்ந்தது? அவள் இறப்பிலிருந்து வாழ்விற்குக் கொண்டுவரப் பட்டாள். இதுவும் இரட்சிப்பின் ஒரு பகுதியாகும்.

அப்போஸ்தலர் 4:9-12

ஆலயத்தின் அலங்கார வாசலருகே அமர்ந்திருந்த பிச்சை கேட்ட அந்த சப்பாணிக்கு அற்புதமான சுகமளித்தலை பேதுருவும் யோவானும் கொண்டு வந்தனர். அன்றைய சமயத் தலைவர்கள் ஒரு விசாரணை நடத்தினர். (இயேசு மக்களைக் குணமாக்கியபோது - அவர் வழக்கமாக ஓய்வு நாளில்தான் அதைச் செய்தார் - சயத்தலைவர்கள் குணமாக்கப்பட்ட மக்களைக் குறித்து கவலைப்படவில்லை. அவர்கள் கவனித்ததெல்லாம் ஓய்வுநாளின் கற்பனையைக் கடைப்பிடிக்கவில்லை என்பதேயாகும். அது மதத்தலைவர்களின் மாதிரியான நடக்கையாகும். அவர்கள் தங்கள் சிறிய கட்டளைகளிலேயே நிலைத்து, தேவனின் உண்மை முக்கிய காரியங்களைத் தவறவிடுகின்றனர்.) சனகெரிப் என்ற சபையின் முன் பேதுருவும், யோவானும் விசாரிக்கப்பட்டபோது, பேதுரு மறுமொழியாக:

''பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக் குறித்து, எதினாலே இவன் ஆரோக்கியமானானென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக் கேட்டால்''

அந்த வார்த்தை சோஜோ என்பதாகும். எனவே, ஒரு சப்பாணியின் உடலுக்கு வலிமையும், ஜீவனையும் மீட்டெடுப்பதும் இரட்சிப்பு என்று அழைக்கப்படுகிறது. நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவ்வாறு நடந்தது என்று பவுல் தொடர்ந்து கூறினார் (வசனம் 10). பின்னர், அவர், ''நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (வசனம் 12) என்றார்.

"ஒரு சப்பாணியின் உடலுக்கு வலிமையும், ஜீவனையும் மீட்டெடுப்பதும் இரட்சிப்பு என்று அழைக்கப்படுகிறது."

மீண்டுமாக, அந்த வார்த்தை சோஜோ என்பதாகும். அந்த மனிதனின் சுகம் இரட்சிப்பாகும்.

அப்போஸ்தலர் 14:8-10

''லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல்,

கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து, பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு: நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான்.”

பவுல் எதற்கேற்ற விசுவாசம் அவனுக்கு இருப்பதாகக் கண்டான் ? அவனுக்கு இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் இருந்தது.

2 தீமோத்தேயு 4:18

இது அந்த வார்த்தையின் முற்றிலும் வேறுப்பட்ட பயன்பாடாகும். பவுல், தனது வாழ்நாளின் இறுதியில், சிறையில் அடைக்கப்பட்டு, மரணதண்டனையை எதிர்கொள்ளப் போகிறபோது, சொன்னதாவது:

“கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்”

‘‘காப்பாற்றுவது’’ என்ற வார்த்தை என்னவென்று யூகிக்கிறீர்களா ? அது மீண்டும் சோஜோ ஆகும் - இரட்சிக்கப்பட்டது! இரட்சிப்பு என்பது அவரது நித்திய

ராஜ்யத்திற்காக தேவனால் பாதுகாத்து வைக்கப்படும் செயல்முறையையும் உள்ளடக்கியது.

இந்த எடுத்துக்காட்டுகள் "இரட்சிப்பு" என்ற கிரேக்க சொல்லை பாவங்களை மன்னிப்பதற்கு தவிர பொருள்களுக்கும் பயன்படுத்துவதைக் காட்டுபவை. இயேசுக் கிறிஸ்துவின் சிலுவை பலி, ரட்சிப்பு என்ற அனைத்தும் உள்ளடக்கிய பயனை வலியுறுத்துகிறது. மனித ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதியையும், நிகழ்காலத்திலும் நித்தியத்திலும் மனித வாழ்வின் ஒவ்வொரு தேவையையும் நிறைவு செய்கிறது. ஒரு தேவை, ஆவிக்குரிய, மனதிற்குரிய, உணர்ச்சி பூர்வமான உடல் சார்ந்த அல்லது பொருளாதாரத்தைக் குறித்து இருப்பினும் இயேசுவின் அந்த ஒரே பலியினால் நிறைவு செய்யப்படுகிறது.

இயேசுவின் சிலுவையில் செய்யப்பட்ட கிரியையைக் குறித்து பல ஆண்டுகளாகத் தியானித்திருக்கிறேன் - **1943**-ல் எகிப்தில் ஒரு பிரிட்டன் ராணுவ மருத்துவமனையில் நோயுற்றிருந்ததிலிருந்து. தேவன் ஒரு விலைமதிப்பற்ற சகோதரியை அனுப்பினார்: அவர் கர்த்தருக்காக உண்மையான போராளியும், **76** வயதுள்ள, இரட்சண்ய சேனையின் (Salvation Army) ஒரு பெண் பிரிகேடியர் ஆவார். அவர் வெளியே சென்று காரில் என்னை தன்னுடன் ஜெபிக்க அனுமதியைப் பெற்றார். அந்த காரில் தேவன் வேறொரு பெண்மூலம் பேசினார், "கல்வாரியின் கிரியைக் கவனியுங்கள் - ஒவ்வொரு வகையிலும் பரிபூரணம் ஒவ்வொரு கூற்றிலும் பரிபூரணம்."

நான் காரிலிருந்து வெளியேறியவுடன், நான் உள்ளே சென்றபோது எப்படி இருந்தேனோ அதே சுகவீனமாய்த்தான் இருந்தேன். ஆனால் தேவன் எங்கு பதிலைக் கண்டடையலாம் எனக் காட்டினார். கல்வாரியின் கிரியையில் ஒவ்வொரு வகையிலும் பரிபூரணம்; ஒவ்வொரு கூற்றிலும் பரிபூரணம். நமது தேவை எந்த வகையைச் சார்ந்திருப்பினும் பரவாயில்லை, இயேசுவின் பலி எல்லாவற்றிலும் பரிபூரணம். எந்த கோணத்தில் பார்த்தாலும், அது பரிபூரணம்.

அந்த நேரம் முதல் (சுமார் 60ஆண்டுகள்) நான் கல்வாரியின் கிரியையைத் தியானித்து வருகிறேன். அதன் முடிவுக்கு வரவேயில்லை. காலப்போக்கில், சிலுவையைக் குறித்து இரு வழிகளில் புரிந்து கொள்ளவும் தொடர்பு கொள்ளவும், கண்டு பிடித்தேன். இயேசுவின் மரணத்தால் நிறைவேற்றப்பட்டவற்றைக் குறித்து இரண்டு திறவுகோல் சொற்கள் உள்ளன. முதற்சொல் பரிமாற்றம் (exchange); இரண்டாவது சொல்; அடையாள உறுதி (identification).

03 : சிலுவை : பரிமாற்றமும் அடையாள உறுதியும்

பரிமாற்றம் **(Exchange)**

சிலுவையைக் காண்பதற்கும் அதை புரிந்துக்கொள்வதற்கான முதல் வழி "பரிமாற்றம்" என்ற சொல்லில் உள்ளது. சிலுவையில் ஒரு தெய்வீக ஆணை நிறைவேற்றப்பட்டது, இவ்வாறாக: தேவன் நியாயப்படி நமக்கு வரவேண்டிய அனைத்து தீங்குகளையும் இயேசுவின் மேல் சுமத்தினார் - ஏனெனில் அதற்குப் பதிலாகத் தமது பரிபூரண, பாவமில்லாத, கீழ்ப்படிதல் உள்ள தேவ குமாரனுக்கு வரவேண்டிய அனைத்து நன்மைகளையும் நமக்கு எளிதில் கிடைக்கக் கூடியதாக்குவதற்கு ஒரு திறவுகோல் வேதப்பகுதி ஏசாயா **53**ஆம் அதிகாரம்.

1. நாம் மன்னிப்படைய இயேசு தண்டிக்கப்பட்டார் ஏசாயா 53:6

> *"நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் (அவரோடு இயேசுவுடன் - ஒன்றாக சந்திக்கச் செய்தார்)"*

நாம் எல்லோரும் நமது வழிக்குத் திரும்பினோம். அதுதான் மனித வர்க்கத்தின் சிக்கல் அந்த ஒன்றில் நாமனைவரும் தவறியுள்ளோம். நாம் அனைவரும் ஒரு வங்கியைக் கொள்ளையடித்திருக்க மாட்டோம், விபசாரம் செய்திருக்கமாட்டோம், குடித்து வெறித்திருக்க மாட்டோம் அல்லது திருடியிருக்க மாட்டோம். ஆனால் ஒரே ஒரு காரியத்தை நாம் அனைவரும் செய்திருப்போம் நமது வழியில் திரும்பியிருப்போம். தேவன் சொல்லுகிறார்: நமது வழிகள் அவர் வழிகள் அல்ல. (ஏசாயா **55:8)**

நமது வழிக்குத் திரும்பிச் செல்லுதல் தேவனுக்கு நமது முதுகைக் காட்டுவதாகும்; அது ''அக்கிரமம்'' என்றழைக்கப்படுகிறது. எபிரெயத்தில் அது வலிமையான வார்த்தை "அவான்" (avon) என்பதாகும். அது தவறு செய்வது என்று மட்டும் பொருள்படாது, தீமைக்குப் பின்தொடரும் தண்டனைகளையும் நியாயத்தீர்ப்பையும் உள்ளடக்கியது. ஏசாயா இங்கு நமக்களிக்கும் வெளிப்பாடு நமது அக்கிரமத்தை எல்லாம் இயேசுவின்மேல் தேவன் சுமத்தினார். நாம் செய்த அனைத்து அக்கிரமங்களால் வந்த தீமையான விளைவுகள் சிலுவையில் இயேசுவின்மேல் வந்தன.

அனைத்து நியாயத்தீர்ப்பையும் தண்டனையுமாகிய தீமையை ஒரு தெய்வீக பரிமாற்றத்தின் மூலம் இயேசுவுக்குரிய நன்மையை நமக்குக் கிடைக்கும்படியாக அவ்வாறு செய்தார். தேவனுடைய கிருபையைத் தவிர, இதற்கான காரணம் வேறொன்றுமில்லை. தேவன் நமக்கு ஏதும் கடன் செலுத்த

வேண்டியதில்லை. அவருடைய அளவிடப்படமுடியாத கிருபையும், புரியக்கூடாத அன்புமே அதற்கு ஆதாரம்.

ஒருபோதும் சம்பாதிக்க முடியாததே கிருபை. தாங்கள் அதை சம்பாதிக்க எப்போதும் முயலுவதால், கிருபை என்றால் என்ன என்று சில கிறிஸ்தவர்கள் உண்மையில் அறிவதில்லை. சிலுவையின் மூலம் இயேசு நமக்கு அருளிச் செய்ததை நாம் ஒருபோதும் சம்பாதிக்க முடியாது. நாம் நல்லவர்களாக முயற்சித்தால், அதை ஒருபோதும் பெறமுடியாது. அது கிருபையினால் மட்டுமே ஆகும். அது விசுவாசத்தால் மட்டுமே பெறப்படுகிறது. “கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்” (எபேசியர் 2:8).

"தாங்கள் அதை சம்பாதிக்க எப்போதும் முயலுவதால், கிருபை என்றால் என்ன என்று சில கிறிஸ்தவர்கள் உண்மையில் அறிவதில்லை."

இயேசு எனக்காக என்ன செய்தார் என்பதைத் தியானிக்க நேரமெடுக்கும் பொழுது, என் மனதுக்கு அது முழுவதுமாக புரிவதில்லை. அவர் கீழிறங்கி வந்தார், நமது இடத்தை எடுத்துக்கொண்டார்-என்னுடைய இடத்தையும் கூட- என்மீது வந்திருக்க வேண்டிய சொல்ல முடியாத பாடுகளை அவரே சகித்தார். அது தான் கிருபை.

2. நாம் குணமாகும்படி அவர் காயப்பட்டார்

ஏசாயா **53:4-5**

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை (அல்லது சுகவீனங்கள், வலிகள்) ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிப்பட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்"

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை (தண்டனை) அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் (காயங்களால்) குணமாகிறோம்."

முதலாவது, நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார். அவர் நமது தண்டனையைச் சுமந்தால், தேவனின் நீதி திருப்தியாக்கப்பட்டு, நமக்கு தேவனோடு சமாதானமாயிருக்க முடிகிறது. இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் **5:1**). இரண்டாவதாக, இயேசு நமது சுகவீனங்களையும் வலிகளையும் சுமந்தார்; அவரது உடலில் ஏற்பட்ட காயங்களினால் அவர் நமக்கு உடல் குணமாக்குதலை சம்பாதித்தார். ("பாடுகள் என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை சுகவீனங்களையும், குறிக்கும்.")

நீங்கள் அதை நம்புகிறீர்களா? நீங்கள் அதை நம்பினால் நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். தேவனிடம் "உமக்கு நன்றி" என்று சொல்லுங்கள். நன்றி சொல்லுதல் விசுவாசத்தின் தூய்மையான வெளிப்பாடாகும். (நாம் நன்றி சொல்லாததால், பல சமயங்களில் தவறவிடுகிறோம்!)

3. அவரது நீதியினால் நாம் நீதிமான்களாக்கப்படும்படி இயேசு நமது பாவத்தால் பாவமாக்கப்பட்டார்

ஏசாயா **53:10**ல் இவ்வாறு வாசிக்கிறோம்

> *"கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார். அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும் போது அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினாலே வாய்க்கும்."*

சிலுவையில், இயேசுவின் ஆத்துமா உலகிற்கு குற்றநிவாரண பலியாக செலுத்தப்பட்டது. பழைய உடன்படிக்கையின் சடங்காச்சாரத்தின்படி, ஒரு மிருகம் பாவநிவாரண பலியாகக் கொண்டு வரப்பட்டால், அதைக் கொண்டு வந்தவன் ஆசாரியனிடம் தனது பாவத்தை அறிக்கையிட்டபின் மிருகத்தின் தலையின்மேல் ஆசாரியன் கைகளை வைத்ததும் அந்த மிருகத்திற்கு மாற்றப்படும். பாவத்தின் தண்டனை மரணம். ஆகவே அந்த மனிதனுக்குப் பதில் அந்த மிருகம் சொல்லப்பட்டது.

''எபிரெய ஆக்கியோன் கூறுகிறார்: ''காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய மாட்டாதே". (எபிரெயர் 10:4) அந்த பலிகள் சிலுவையில் நடக்க இருப்பவைகளுக்கு ஒரு முன் அடையாளம். இயேசு சிலுவையில் மரித்தபோது, அவர் மனித வர்க்கத்திற்கு குற்றநிவாரண பலியாக்கப்பட்டார்.

கர்த்தராகிய இயேசுவுக்கு, அவரது முழு தூய்மையும் பரிசுத்தத்துடன், மனித குலத்தின் பாவத்துடன் அடையாளம் செய்யப்பட்டு, நமக்காகத் தண்டிக்கப்படுதல் அவருக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியதென்று நமது மனங்களில் புரிந்துகொள்ள வழியே இல்லை. நான் வெளிப்படையாக தருக்கலுள்ளவன் அல்ல, ஆனால் நமது சமூகத்தில் தற்போது நிகழும் சில செயல்களைக் குறித்து சிந்திக்கும் போது, எனக்கும் கூட இத்தகைய பாவங்களுடன் என் ஆத்துமா அடையாளம் செய்யப்படுவது கலக்கத்தை உண்டாக்குகிறது. ஆனால் இயேசு நமக்காகக் குற்றநிவாரண பலியான போது இவை எல்லாம் அவருக்கு ஏற்பட்டத்தில் ஒரு மிக மிகச்சிறிய அளவேயாகும்.

"கிறிஸ்துவில் தேவனுடைய நீதியே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது."

எபிரெயர் நிரூபத்தை எழுதியவர் மேலும் கூறுகிறார். "அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று

அவைகளினாலே வருஷந்தோறும் நினைவு கூருதல் உண்டாயிருக்கிறது". (எபிரெயர் 10:3) பழைய ஏற்பாட்டின் பலிகள் பாவத்தை நீக்காது. அவை மக்களை தாங்கள் பாவிகள் என்றே நினைவூட்டப்பட்டனர். மற்றொரு ஆண்டிற்கு அப்பாவங்கள் மூடப்படும். ஆனால் இயேசு "பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி....'' (எபிரெயர் 10:12) அவர் தம்மைத்தாமே பலியாக சிலுவையில் செலுத்தியதால் அவர் பாவத்தை நித்தியமாக முடிவுண்டாக்கினார். அவரது பலி பாவத்தை நீக்கியது.

2 கொரிந்தியர் 5:21ல், பவுல் ஏசாயா 53ஆம் அதிகாரத்தைக் குறிப்பிடுகிறார். ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத அவரை (இயேசுவை) நமக்காகப் பாவ மாக்கினார்."

நீங்கள் அந்த பரிமாற்றத்தை (Exchange) பார்க்கிறீர்களா? நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக இயேசு நமக்காகப் பாவமாக்கப்பட்டார். நாம் அவருடைய நீதியின் மூலமாக நீதிமான்களாகிறோம். நமது நீதியினாலல்ல. நாம் செய்யும் மிகச் சிறந்தது போதாது; ஏனென்றால் ஏசாயாவும் சொல்கிறார்: ''எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போலிருக்கிறது" (ஏசாயா 64:6). ஏசாயா 61:10. எனக்கு பிடித்த வசனங்களில் ஒன்று கூறுகிறது.

> *"கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என்*
> *தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது;*

அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்."

இரட்சிப்பின் ஆடைகளை நமக்கு அளிப்பது மட்டுமின்றி பாவமில்லாத தேவ குமாரனின் நீதியினால் நமக்கு சால்வையை சுற்றுகிறார். பிசாசு நம்மை எந்த கோணத்தில் பார்த்தாலும் சரி, நமக்கு எதிராகச் சொல்ல அவனுக்கு ஒன்றுமில்லை. கிறிஸ்துவில் தேவனுடைய நீதியே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

இயேசுவின் நிதியைத் தரித்திருப்பதால் நாம் மகிழ்கிறோமா ?

4. நாம் ஜீவனைப் பெறும்படி இயேசு நமது மரணத்தை ஏற்று மரித்தார்

தொடர்ந்து பரிமாற்றம் குறித்து எபிரெயர் 2:9ல் நமக்கு கூறுகிறது

"(இயேசு) தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படி..."

அவர் ஒவ்வொரு மானிடனுக்குப் பதிலாகவும் மரணத்தை ருசிப்பார்த்தார். நான் இதைப் புரிந்து கொண்டவரை, இயேசுவின் கிரியை ஆதாமின் ஒவ்வொரு சந்ததியினரையும் உள்ளடக்கியது. இயேசுவே இறுதி ஆதாம் (1கொரிந்தியர் 15:45). ஏன் தேவன் ஆதாமிலும் அவன் சந்ததியிலும் ஏன் இவ்வளவு

அக்கறை கொண்டார் என்பதை நாம் புரிந்து கொள்ளவே முடியாது.

அசாதாரண வழியில் ஆதாமின் சந்ததியைத் தேவன் ஆரம்பித்தார். மற்ற எந்த சிருஷ்டியை விட ஆதாம் வித்தியாசமான வழியில் சிருஷ்டிக்கப்பட்டான். வேதம் சொல்கிறது: “கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது” **(சங்கீதம் 33:6)** ஆனால், ஆதாமை சிருஷ்டித்தபொழுது, தேவன் மண்ணினால் ஒரு உருவத்தை உண்டாக்கினார். பிறகு அந்த தெய்வீக மனிதன் தேவத்துவத்தின் இரண்டாவது ஆள், தேவனுடைய வார்த்தையானவர் உண்டாக்கப்பட்டதெல்லாம் அவர் மூலமாய் உண்டாயின **(யோவான் 1:3)** - குனிந்து அந்த மனிதனுடைய நாசியில் ஜீவ சுவாசத்தை ஊதினார் **(ஆதியாகம் 2:7)** “ஊதினார்” என்பதற்கான எபிரெய சொல் மிகவும் வலிமைவாய்ந்தது. அது “நபாக்” என்பதாகும். அந்த “பா” சத்தம் வெடிச்சத்தம் போன்றது! தேவன் ஆதாமுக்குள் சுவாசத்தை “வெடித்தார்”! அவர் தனது ஜீவனை அவனுக்கு அளித்தார். அதன் பௌதீக விளைவுகளை எண்ணிப் பாருங்கள்: ஒரு களிமண் உடல், செயல்படும் கண்கள், காதுகள் மற்றும் உடலுறுப்புகளைக் கொண்ட ஒரு உயிருள்ள மனிதனாக மாறியது. கர்த்தருடைய ஆவியானவர் இதை செய்தார்.

தெய்வீக சுகமளிக்கும் வல்லமையை நம்புவது தர்க்கமுறையானது. உன்னுடைய கடிகாரம் சரியாக ஓடாவிடில்,

அதை செருப்பு தைப்பவரிடம் கொண்டு செல்வதில்லை அதைக் கடிகாரம் செய்பவரிடம் கொண்டு செல்வீர்கள். அதேபோல், உடல் சரியில்லை என்றால் உடலை உண்டாக்கியவரிடம் கொண்டு செல்ல வேண்டும். நமது உடலை உண்டாக்கியவர், கர்த்தர், குறிப்பாக பரிசுத்த ஆவியானவர் அவர்தான் ஆதாமின் உடலை உயிர் பெறச் செய்தார்.

மனிதனை மீட்கத் தேவன் வந்தபோது - அவர் மிகவும் கீழிறங்கினார். இயேசு கிறிஸ்து சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். அவர் உயிருடன் எழுந்தபிறகு ஒரு ஞாயிறு மாலை வேளையில் காட்சியருளியபோது, புதுசிருஷ்டியான மனிதனிடம் மீண்டும் சிருஷ்டிப்பை செய்து காட்டினார். இயேசு தமது சீஷர்களின்மேல் ஊதி கூறினார். "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" (யோவான் 20:22)

"பாவத்தையும் மரணத்தையும் வென்ற அவரது தெய்வீக வாழ்வு நரகத்தையும் கல்லறையையும் மட்டுமல்ல சாத்தானையும் வென்றது."

அந்த கிரேக்க வார்த்தை "எம்புசா" ஆகும் (emphusao). ஒரு புல்லாங்குழல் இசைப்பவன் தன் வாயால் அந்த இசைக் கருவியில் ஊதுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இயேசு அவர்கள் அனைவருக்கும் கூட்டாக ஊதுவதை நான் குறிப்பிடவில்லை. அவர் அவர்கள் ஒவ்வொருவரின் அருகில் சென்று தனித்தனியாக அவர்களுக்கு ஜீவ சுவாசத்தை ஊதினார் எனக்

கருதுகிறேன். பாவத்தையும் மரணத்தையும் வென்ற அவரது தெய்வீக வாழ்வு நரகத்தையும் கல்லறையையும் மட்டுமல்ல சாத்தானையும் வென்றது. அது ஒரு முற்றிலும் வெற்றியான வாழ்க்கையாகும். அது நித்திய வாழ்வு, தெய்வீக வாழ்வு, அழிவில்லா வாழ்வு மற்றும் அழிக்கப்பட முடியாத வாழ்வு போன்றதாகும்.

இது தான் புதிய பிறப்பு. அந்த சீஷர்கள் தேவனுடைய ஆவியால் மறுபடியும் பிறந்து பழைய ஏற்பாட்டு இரட்சிப்பிலிருந்து வெளியே வந்தனர். அந்த பழைய ஏற்பாட்டு இரட்சிப்பு, சிலுவை மற்றும் உயிர்த்தெழுதலாகிய முடிவடைந்த வரலாற்று உண்மையை வெளிப்படுத்தும் புதிய ஏற்பாட்டு இரட்சிப்பு நிகழ எதிர்நோக்கியது. புதிய ஏற்பாட்டு இரட்சிப்புக்குள் உட்செல்ல, இருகாரியங்களை நீங்கள் செய்ய வேண்டும் இயேசுவே கர்த்தர் என்று அறிக்கையிட வேண்டும்; தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று விசுவாசிக்க வேண்டும் (ரோமர் 10:9). இப்போதுதான் சீஷர்கள் முதன்முறையாக இவ்வாறு விசுவாசித்தனர். அதுதான் புதிய ஏற்பாட்டு இரட்சிப்பு! நாம் அவரது வாழ்வில் பங்கு கொள்ளும்படி, நமக்காக இயேசு மரணத்தை ருசிப்பார்த்தார்.

5. நாம் ஆசீர்வாதத்திற்கு உட்புக இயேசு சாபமாக்கப்பட்டார்

கலாத்தியர் 3:13-14 இந்த பரிமாற்றத்தில் மிகவும் பரிமாற்றமாக்கப்பட்ட பகுதியைக் காண்பிக்கிறது.

“மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.”

இதில் பரிமாற்றம் என்ன ? இதில் கெட்ட காரியம் என்ன ? சாபம். நல்ல காரியம் எது ? ஆசீர்வாதம்! நாம் ஆசீர்வாதத்தைப் பெறும்படி, இயேசு நமக்காக சாபமானார்.

நான் ஒன்று அல்லது இரண்டு மணிநேரம் இந்த ஒரு பொருளைப் பயிற்றுவித்திருக்கிறேன். அது விடுதலை, குணமாக்குதல் மற்றும் சமாதானம் என்ற ஒரு முழு, புதிய வாயிலைத் திறக்கிறது. சிலுவையில் தொங்கிய இயேசுவைக் கவனியுங்கள். அவர் மனிதனால் தள்ளப்பட்டவரும், தேவனால் கைவிடப்பட்டவரும், இருளில் வேதனையில் பூமியிலும் அல்ல, பரலோகத்திலும் அல்ல. அவர் இவ்வாறு இருந்தார். அவர் முற்றிலுமாகத் தள்ளப்பட்டவரும், முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படாதவருமாக இருந்தார். அதுதான் சாபம்.

ஆனால், தேவனுக்கு நன்றி! ஆனால் தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் மகிழ, இயேசு ஒரு சாபமாக்கப்பட்டார்.

6. இயேசுவின் செழிப்பில் பங்குகொள்ள அவர் நமது வறுமையைச் சகித்தார்

2 கொரிந்தியர் 8:9 சொல்கிறது:

> *“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே”*

இந்த பரிமாற்றத்தைப் பார்க்கும்படி நீங்கள் ஒரு இறையியல் வல்லுநராக இருக்க வேண்டியதில்லை. இதில் கெட்ட காரியம் எது ? வறுமை. நல்ல காரியம் எது ? நான் “பெருக்கம்” என்ற பதத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன். ஏனென்றால் பெருக்கம் என்றால் உன்னுடைய தேவைகளுக்குப் போதுமானது மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் கொடுக்கக் கூடிய அளவு இருப்பதேயாகும் (2 கொரிந்தியர் 9:8 இதை, சகலவித நல்ல கிரியைக்கும் போதுமான பெருக்கம் என விவரிக்கிறது). நாம் அவரது பெருக்கத்தில் பங்குகொள்ள இயேசு வறுமையைச் சகித்தார்.

7. அவருடைய மகிமையில் பங்குகொள்ள இயேசு நமது வெட்கத்தை சுமந்தார்

இயேசு நிர்வாணமாக சிலுவையில் தொங்குவதையும் அருகில் மக்கள் நடந்து சென்று அவரைக் கேலி செய்வதை

எண்ணிப் பாருங்கள் எபிரெயர் **12:2** கூறுகிறது:

> *"...அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து..."*

அநேக மக்கள் வெட்கத்தினாலே வாதிக்கப்படுகிறார்கள். ஆனால், உங்களுக்கு ஒரு நற்செய்தி, இயேசு உங்கள் வெட்கத்தை சகித்தார். நமக்காக அவர் வெட்கத்தை சகித்தார்.

தங்கள் இளமையான ஆண்டுகளில் பல சிறுவர்கள் பாலியல் வன்முறையை அனுபவத்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையான ஒன்றாகும், இது ஒரு வெட்கத்துக்கான முக்கிய காரணம். நாமெல்லோரும் அவரது மகிமையில் பங்குகொள்ள, இயேசு வெட்கத்தை சகித்தார்.

8. பிதாவாகிய தேவனுடன் நாம் ஏற்றுக் கொள்ளப்படும்படி இயேசு நமது தள்ளிவிடப்பட்டலைச் சகித்தார்

சிலுவையில், தேவன் இயேசுவைத் தள்ளிவிட்டார். இயேசு கத்தினார்: "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத்தேயு **27:46**). ஒரு மறுமொழியும் வரவில்லை. அதுதான் தேவ குமாரன் ஜெபித்து ஒரு பதிலும் கிடைக்காத முதல் தடவை. அந்த நிகழ்வுக்கு சிறிது நேரத்தில், உடைந்த உள்ளத்தால் அவர் இறந்தார். சங்கீதம் **69:20**ல் கூறப்படுகிறது:

> *"...நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது..."*

சிலுவைப்பாடுகளால் இயேசு மரித்தார் என நான்

"இவ்வாறு நமது அனைத்து உணர்ச்சி பூர்வமானத் தேவைகள் எல்லாம் இரட்சிப்பு நிறைவு செய்கிறது."

நம்புவதில்லை. அவர் சிறிது கூடுதல் காலம் வாழ்ந்திருக்கலாம். அவர் உடைக்கப்பட்ட இருதயத்தால் இறந்தார் - தள்ளிவிடப்பட்டதனால் இந்த தள்ளிவிடுதலை ஏன் சகித்தார்? நாம் ஏற்றுக் கொள்ளப்படும்படி! சிலுவையில் இயேசு சகித்தவற்றால், தேவன் நம்மை இப்பொழுது தனது குடும்ப அங்கத்தினர்களாக ஏற்க முடியும். அவர் நம்மை ஏற்றுக்கொண்டார்; நாம் அவர் பிள்ளைகள் ஆகிறோம்!

பெற்றோர்களின் தவறுகளாலும், விவாகரத்தாலும், மனிதர்களில் ஒருவருக்கொருவர் ஏற்படும் பொதுவான கொடுஞ்செயல்களாலும் இவை போன்றவற்றாலும் மக்களில் 50% தள்ளிவிடப்பட்டதால் தள்ளாடுகின்றனர் என நினைக்கிறேன். நாம் உலகத்துக்குள் சென்று நமக்கு அதில் பதில் உண்டு எனக் கூறலாம். இயேசுவின் சிலுவை மரணத்தால் அது அளிக்கப்பட்டுள்ளது. இயேசு நமக்காக அந்த தள்ளிவிடுதலை சகித்தார் - அவருடைய ஏற்றுக் கொள்ளுதலை அறிய.

இவ்வாறு நமது அனைத்து உணர்ச்சி பூர்வமானத் தேவைகளையெல்லாம் இரட்சிப்பு நிறைவு செய்கிறது. அது முழுவதும் பூரணமானது; அது முழுவதும் முழுமையானது.

அடையாள உறுதி (Identification)

நாம் ''பரிமாற்றம்'' **(exchange)** என்ற சொல்லைப் பார்த்தோம். நான் அடையாள உறுதி என்ற சொல்லை ஆராய விரும்புகிறேன். ஒருவரிடம் அடையாள உறுதி செய்வது அவருடன் ஒன்றிணைவது - அந்த நபரின் இடத்தில் உங்களை வைப்பது ஆகும்.

சிலுவை இரு அடையாள உறுதியை உள்ளடக்கியது. முதலில், சிலுவையில், இயேசு பாவிகளென்று உங்களோடும் என்னோடும் அடையாளம் காட்டினார். இறுதி ஆதாம் என்ற முறையில், அவர் ஆதாமின் சந்ததி முழுவதோடும் அடையாளம் காட்டி, நமது பாவங்களின் தண்டனையைச் செலுத்தினார். அவர் நமக்கு பதிலாக நமது இடத்தில் மரித்தார்.

ஆனால் அடுத்த அடையாள உறுதிக்கு நாம் பதிலளிக்கும்போது தான் இரட்சிப்பு வருகிறது - இயேசுவுடன், அவரது மரணம், அவரது அடக்கம், அவர் உயிரோட்டப்படுதல், அவரது உயிர்த்தெழுதல், அவர் பரமேறுதல் ஆகியவற்றில் நம்மை அடையாள உறுதி செய்தால் மட்டுமே அது வரும். அவர் முதல் அடையாள உறுதியைச் செய்தார்; அது முடிந்தது. அவருடைய மரணம் முதல் எதெல்லாம் அவருக்கு வந்ததோ, அதனுடன் நம்மை அடையாள உறுதிசெய்யும் போது நாம் இரட்சிப்பை சுதந்தரிக்கிறோம்.

இறுதி ஆதாமாகிய இயேசு மனிதனுடன் தம்மை அடையாள உறுதியாக்கினார்.

1 கொரிந்தியர் 15ஆம் அதிகாரத்தில் இரண்டு மகிமையான பட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை சில சமயங்களில் தவறாக மேற்கோள் காட்டப்படுகின்றன. 45 மற்றும் 47ஆம் வசனங்களில் பவுல் இவ்வாறு கூறுகிறார்.

அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்...... முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்.

அந்த இரண்டு பட்டங்கள் "பிந்தின ஆதாம்" மற்றும் "இரண்டாம் மனுஷன்". இயேசுவை "இரண்டாம் ஆதாம்" என்று மக்கள் அழைப்பதை அடிக்கடிக் கேட்டுள்ளேன். ஆனால் அவர் அவ்வாறு அழைக்கப்படவில்லை. அவர் "பிந்தின (இறுதி) ஆதாம்" எனப்படுகிறார், மேலும் அதன்பின் "இரண்டாம் மனுஷன்" எனப்படுகிறார்.

சிலுவையில், இயேசு கடைசி ஆதாமாக மரித்தார்; காலத்தில் இறுதியானவர் என்ற பொருளில் அல்ல, முழு ஆதாமின் சந்ததியின் நியாயத்தீர்ப்பு அவர் மேல் வந்ததால் இறுதியானவர். மூன்றாம் நாள் உயிரோடு எழுந்த போது, அவர் இரண்டாம் மனிதனாக எழுந்தார் முன் ஒரு போதும் இல்லாத ஒரு சந்ததியின் தலையானார். அவர்தான் உடலின் தலை, மரித்தோரிலிருந்து முதற்பேரானவர்.

இயேசுவுடன் விசுவாசியின் அடையாள உறுதி

1 பேதுரு 1:3-4; அப்போஸ்தலன் பேதுரு கூறுகிறார்;

> *"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே...... தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்"*

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வழியாக, நாம் அவரோடு தம்மை அடையாள உறுதி செய்யும்போது, நாம் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறோம். புது சிருஷ்டிக்குள் பிறக்கிறோம். இயேசுவின் உயிர்த்தெழுதலிலிருந்து, தேவன் பூமியில் ஒரு புதிய காரியத்தை செய்திருக்கிறார்.

இறுதி ஆதாமாக இயேசு மரித்ததின் விளைவை நாம் பார்ப்போம். பவுல் இதை ரோமர் 6ஆம் அதிகாரத்தில் மேலும் விளக்குகிறார். 6ஆம் வசனம் நீண்ட வாக்கியங்களின் நடுவே உள்ளது.

> *''நாம் இனிப்பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே (இயேசுவோடே) கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்."*

இது ஒரு முக்கிய அறிக்கையாகும். இயேசு சிலுவையில் பார்த்தபோது நமது பழைய மனிதன் (நமது முரட்டாட்டமுள்ள,

"தேவன் சிலுவையில் செய்தது ஒரு முடிவுற்ற வரலாற்று உண்மை."

விழுந்த ஆதாமின் சுபாவம்) அவரோடு கூட சிலுவையிலறையப்பட்டது. அது ஒரு வரலாற்று உண்மை. நமது பழைய மனிதன் திருத்தப்பட முடியாதவன் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் அவனை முன்னேற்ற முயற்சிக்கவில்லை - சபைக்கு அனுப்பவோ வேதாகமத்தைக் கற்பிக்கவோ இல்லை! அவர் நமக்குள் இருக்கும் பழைய மனிதனுக்கு கற்பிக்கவோ இல்லை! அவர் நமக்குள் இருக்கும் பழைய மனிதனுக்கு ஒரே ஒரு தீர்வு வைத்துள்ளார் - அது மரண தண்டனை. இரக்கத்தின் செய்தி என்னவெனில் அந்த மரண தண்டனை 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசு சிலுவையில் மரித்தபோது நிறைவேற்றப்பட்டது. நமது பழைய மனிதன் அவருடன் சிலுவையிலறையப்பட்டான்.

11ஆம் வசனத்தில் நாம் செய்ய வேண்டியதை பவுல் நமக்கு கூறுகிறார், "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்."

தேவன் சிலுவையில் செய்தது ஒரு முடிவுற்ற வரலாற்று உண்மை. நாம் அதை அறிந்துள்ளோமோ அல்லது நம்புகிறோமோ, அது உண்மையானது. ஆனால் நாம் அதை அறிந்து விசுவாசித்து, செயல்படுத்தும்போது அது நம்மில் கிரியை

செய்கிறது. இயேசு சிலுவையில் மரண தண்டனை அடைந்ததுபோல், என்னுடைய வீழ்ந்த, முரட்டாட்டமுள்ள, தூய்மையற்ற சுபாவமும் மரணமடைய வேண்டும் என நம்புகிறேன். அடையாளப்படுத்துவதின் மூலமாக, இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலமாக வெளியேற்றுகிறோம். பவுல் சொல்கிறார்: பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்ளுங்கள்.

பாவத்திற்கு மரித்தல் என்றால் என்ன ? நான் ஒரு கெட்ட மனிதனைக் கொண்ட கற்பனைக் கதையினால் விளக்குவேன். மதவாதிகளின் அளவுகோல்களின்படி அவன் பயங்கரமானவன்: அவன் விஸ்கி குடித்தான். அவன் நிந்தனை செய்வான், தனது மனைவி பிள்ளைகளை சபிப்பான். அவன் தொலைக்காட்சியில் எல்லாவித கெட்ட நிகழ்ச்சிகளையும் பார்ப்பான். இருப்பினும், அவனது மனைவியும், பிள்ளைகளும் விசுவாசிகள். ஞாயிறு மாலைகளில் உள்ளூர் நற்செய்தி ஆராதனைகளுக்குச் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும்பொழுது அவர்களை அவன் சபிப்பான்.

ஓர் இரவு சத்தமின்றி வெளியேறினர். ஒரு நாள் நற்செய்தி ஆராதனையில் மகிமையான இரவைக் கழித்தனர். மறுபடி திரும்பி வரும்போது பாடல்களைப் பாடிய வண்ணம் வந்தனர். உள்ளே வரும் போது அந்த சாபங்களைக் கேட்க காத்திருந்தனர். ஆனால், ஒரு சாபமும் வரவில்லை. அவர்கள் உள்ளே பார்த்தனர். சுருட்டு சாம்பல் கரண்டியில் இருந்தது.

அதிலிருந்து புகை எழும்பிற்று. ஆனால் அவன் புகைக்கவில்லை அந்த விஸ்கி பாட்டில் இருந்தது. ஆனால் அவன் குடிக்கவில்லை என்ன நடந்தது தெரியுமா? அந்த மனிதனுக்கு ஒரு இதய தாக்குதல் ஏற்பட்டு மரித்தான். ஆகவே பாவத்துக்கு மரித்தான்! பாவம் அவனுக்கு கவர்ச்சியாக இருக்கவில்லை. அவன்மேல் பாவத்துக்கு வல்லமை இல்லை. அவன் இப்பொழுது அதற்கு மரித்தவனானான்.

இயேசு சிலுவையிலே மாண்டபொழுது, நமது பழைய அழிவுள்ள பாவ சுபாவம் அவரில் மரித்தது. பாவத்திற்கு இனி நம்மேல் வல்லமை இல்லை; நமக்கு பாவம் எவ்வித கவர்ச்சியையும் அளிப்பதில்லை; நம்மிடமிருந்து எந்த எதிர்வினையும் உண்டாக்குவதில்லை. அடையாள உறுதியின் மூலம், தங்களது பிரச்சனைகளிலிருந்து விடுபட உலகம் முழுவதும் பயணம் செய்த மக்களை சந்திக்கிறேன். பழைய மனிதன் மூலமாக, அவர்கள் உண்மையான பிரச்சனை அவர்களோடு கூட செல்கிறது. பயணம் செய்வதன் மூலம் பழைய மனிதரிடமிருந்து தப்ப முடியாது. அதிலிருந்து தப்பிக்க ஒரே ஒரு வழி உண்டு-நமக்காக மரித்த கர்த்தராகிய இயேசுவின் மரணத்தின் மூலமாகத்தான் அந்த அடையாள உறுதியின் இரண்டாவது பக்கம் இயேசுவுடன் நம்மை அடையாள உறுதி செய்வதேயாகும். இதை விசுவாசத்தால் செய்கிறோம். வேதம் அதை உண்மை என்று கூறுவதால் நாம் செய்கிறோம். இந்த அடையாள உறுதிக்கு 5 அடிப்படைகள் உள்ளன.

நாம் அவருடன் மரித்தோம்

முதலில், நாம் கிறிஸ்துவுடன் - இறந்தகாலம் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நிகழ்ந்த ஒன்று இது. கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, கொலோசெயர் **3:3**ல், பவுல் கூறுகிறார்:

> *''நீங்கள் மரித்தீர்கள்; உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது''*

அவர்கள் பூமியில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மரித்துவிட்டார்கள். எப்போது அவர்கள் மரித்தார்கள் **?** இயேசு சிலுவையில் மரித்தபோது.

2 தீமோத்தேயு **2:11**ல், பவுல் கூறுகிறார் "இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில் நாம் அவரோடேகூட மரித்தோமானால் அவரோடே கூடப்பிழைத்துமிருப்போம். "

அவருடைய மரணம் நமது மரணம். ஆனால் இரட்சிப்புக்குள் உட்புக, பாவி விசுவாசத்தின் மூலம் அடையாள உறுதியை முற்றுப் பெற செய்ய வேண்டும்.

நான் சொல்ல வேண்டும்: "ஆம், இயேசு சிலுவையில் மரித்த போது நானும் மரித்தேன். அவரது மரணம் என்னுடைய மரணம். எனது பழைய மனிதன் அவர் மரித்தபோது, அவனும் மரித்தான்." பிறகு நான் கூறுவேன், "அவருடன் மரித்தால், நான் அவரைப் பின்பற்ற வேண்டும்: மரணத்திலிருந்து அடக்கம்பண்ணுதல் வரை; அடக்கத்திலிருந்து உயிர்த்தெழுதலுக்கு."

அவருடன் அடக்கம்

இயேசுவின் மரணத்தை தொடர்ந்து அவரது அடக்கம் இருந்தது நாம் அவரது அடக்கத்தில் எவ்வாறு அடையாள உறுதி செய்கிறோம்? ஞானஸ்நானத்தின் மூலம். அதனால் தான் ஞானஸ்நானம் மிகவும் முக்கியம். அவரது மரணத்துடன் அடையாள உறுதி செய்யப்படுவது உள்ளானது. ஆனால் அவருடைய அடக்கத்துடன் நம்முடைய அடையாள உறுதி வெளியானது. அது கர்த்தருடன் காணக்கூடிய அடையாள உறுதியாகும்.

"நாம் அவரது அடக்கத்தில் எவ்வாறு அடையாள உறுதி செய்கிறோம்?."

புதிய ஏற்பாட்டில் விளக்கப்பட்டுள்ள தண்ணீர் ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் திறந்த வெளிப்படையான அடையாள உறுதி செயல் ஆகும். ஆரம்பகால சபையில், எந்தவித ஐயமுமின்றி, ஒவ்வொரு மனந்திரும்பியவனும் - ஒவ்வொரு சீஷனானவனும் - தான் அறிக்கையிட்ட இரட்சகரும் கர்த்தருமானவருடன் அடையாள உறுதி செய்ய உடனடியாக தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பது தேவைப்பட்டது. சபையின் ஐக்கியத்தில் இணைவது ஞானஸ்நானத்தின் வழியாகத்தான். என் கருத்துப்படி, பாவிக்குப் பூமியில் கிடைக்கும் ஒரு மிகப் பெரிய சிலாக்கியம் இது தான்; கர்த்தருடன் வெளிப்படையாக

அடையாள உறுதி செய்தல். மனிதனுக்கு முன்பாக மட்டுமல்ல, இந்த முழு உலகத்துக்கும் முன்பாக இது நடைபெறுகிறது.

கிறிஸ்தவத்துக்கு எதிரான அரசு இருக்கும் நாடுகளில், தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு தீர்மானமான முடிவுநிலை - முஸ்லீம்கள், கம்யூனிஸ்டுகள், யூதர் மற்றும் பலர் இருக்கிறவர்களின் மத்தியில். இயேசுவை விசுவாசிக்கிறேன் என்று நீங்கள் சொல்லலாம், அதனால் அவர்கள் கோபமடையக்கூடும். ஆனால், ஞானஸ்நானம் எடுக்கும்போது, நரகமே அழுகிறது, ஏனெனில் அவர்கள் பகுதியிலிருந்து தப்பிவிட்டீர்கள். ரோமர் **6:4** இவ்வாறாக கூறுகிறது.

> *"மேலும், பிதாவின் மகிமையினாலே, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்."*

இவ்வாறு ஒவ்வொரு ஞானஸ்நான ஆராதனையும் உண்மையில் "இரட்டை ஆராதனை". இது ஒரு அடக்கம், அதை தொடர்ந்து உயிர்த்தெழுதல்! கொலோசெயர் **2:12**இல், பவுல் அதையே கூறுகிறார்:

> *"ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின (உயிர்த்தெழச்*

செய்த) தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்."

நாம் ஞானஸ்நானத்தால் அவரோடு கூட அடக்கம் பண்ணப்பட்ட பிறகு, அவரது அடக்கத்தைப் பின்தொடர்ந்த எல்லா காரியங்களிலும் அவரைப் பின்பற்ற நமக்கு உரிமை உண்டு.

உயிரடையச் செய்து, உயிர்த்தெழுப்பப்பட்டு அரியணையில் அவரோடு ஆளுகை

எபேசியர் 2:4-7ல் மேலும் மூன்று நிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

"தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். (கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்).... கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, (உயிர்த்தெழச் செய்து) உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்."

''அவரோடுகூட'' என்ற சொல் 3 தடவை வருகிறதென்பதைக் கவனியுங்கள். இயேசு மரித்தவராகக் கல்லறையிலிருந்து வெளியே வரவில்லை. அவர் உயிரடையச் செய்யப்பட்ட பின்னரே கல்லறையிலிருந்து வெளியே வந்தார்.

நாமும் கிறிஸ்துவுடனே கூட உயிரடையச் செய்யப்படுகிறோம். பின்னர் அவரோடு கூட உயிர்த்தெழவும் செய்கிறோம். இத்துடன் இங்கு நிற்பதில்லை. உன்னதங்களில் அவரோடு கூட உட்கார வைக்கப்படுகிறோம். இப்போது உன்னதத்தில் எதன்மீது அமர்ந்திருக்கிறார் ? ஒரு சிங்காசனம். இவ்வாறு அவரோடு கூட சிங்காசனத்தில் அமர்த்தப்படுகிறோம்! நாம் மரித்தது மட்டுமல்ல, உயிரடையச் செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்து கிறிஸ்துவுடனே கூட சிங்காசனத்தில் அமருகிறோம்.

இவை எல்லாவற்றையும் செயலாக்க முற்றிலும் நமது வலிமைக்கு அப்பாற்பட்டது. இது மிகத் தெளிவானது. அதற்காக கிரியை செய்ய ஒரு வழியும் இல்லை. அதற்குத் தேவைப்படும் அந்த அளவு நல்லவராகவோ தகுதி வாய்ந்தவராகவோ இருக்கவும் வழி இல்லை அதை விசுவாசத்தினால் மாத்திரம் பெறமுடியும் - விசுவாசம் மட்டுமே.

இரட்சிப்பை சம்பாதிக்க தாங்கள் ஏதாவது செய்து கொண்டிருக்க வேண்டுமென பல கிறிஸ்தவர்கள் ஒரு அமைதியற்ற மனநிலையில் உள்ளனர். ஆகவே அதன் விளைவு உண்மையில் அவர்கள் அதைப் பெறவோ அனுபவிக்கவோ இல்லை ஆலயத்திற்கு ஒழுங்காகச் சொல்பவரைவிட மிக மோசமான பாவிகள் இரட்சிக்கப்படுவது எளிது. இதைக் கவனித்ததுண்டா ?

தேவனின் நோக்கம்

நாம் உயிரடைந்து, உயிர்த்தெழுந்து, அரியணை ஏற்றப்பட்டதை எபேசியர் **2**ஆம் அதிகாரத்தில் கூறியபின் தேவனுடைய நோக்கத்தை வெளிப்படுத்துகிறார் ஏன் அதைத் தேவன் செய்தார்?

அவருடைய கிருபையின் ஐசுவரியத்திற்கு செயல் விளக்கமளிக்க

எபேசியர் **2:6**

> *"....தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக"*

எத்தகைய திகைப்பூட்டும் சிந்தனை? இந்த உலகில் மட்டுமல்ல, நித்திய நித்தியமாக தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தை விளங்கச்செய்ய - உலகம் அனைத்திற்கும்! தேவன் உருவாக்கப்பட்ட எவருக்கும் அவருடைய கிருபையின் அளவைக் காண்பிக்க விரும்பும்போதெல்லாம், அவர் கூறுவார். "இம்மக்களைப் பாருங்கள்! அவர்கள் என்னுடன் எவ்வளவு நெருங்கியுள்ளனர், என்னை ஆராதிக்கிறார்கள்; அவர்கள் என்னுடைய பிள்ளைகள்! அவர்கள் பாவிகளாக, முரட்டாட்டமுள்ளவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக, ஆதாயமில்லாதவர்களாக, பயனற்றவர்களாக எனக்கு விரோதிகளாக இருந்தார்கள். இருப்பினும் அவர்களை நித்தியத்திற்காக எனது அருகில் கொண்டு வந்தேன்! நீங்கள்

அதற்குத் தயாராக உள்ளீர்கள் என்று நம்புகிறேன். தேவனுடைய கிருபையை நித்தியமாக காண்பிப்பவராக இருப்பீர்கள் என்பதை உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

கிருபையை சம்பாதிக்க முடியாது என்பதை நினைவு கூறுங்கள். நாம் முழுவதும் புரிந்து கொள்ள முடியாத பல காரியங்கள் தேவனுடைய ஆலோசனைகளில் உள்ளன. ஆனால், ஒரு வகையில் தம்முடைய கிருபையை விளங்கச் செய்ய, பாவம் நிகழ தேவன் அனுமதித்தார் என எண்ணுகிறேன். தேவன் பாவத்தை அங்கீகரித்தார் என்று நான் கூறவில்லை. பாவம் பிரவேசித்தபோது "எல்லாம் முடிந்தது" என்று கூறாமல் "முழு உலகிற்கும் என்னுடைய கிருபைக்கு செயல்விளக்கம் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பு'' என்றார். அவரது குணாதிசயத்தின் பல பகுதிகளான அதுவரைக் காண்பித்தவர் அவரது கிருபையை முழுமையாக விளங்கச் செய்யவில்லை. ஆகவே, நாமே அவரது 'வாய்ப்பு'! முழு உலகிற்கும் தமது கிருபையின் தன்மையை விளங்கச் செய்யும் மக்களாக தேவன் நம்மை வைத்துள்ளார்.

நம்மை அவரது தலைசிறந்த படைப்பாக்க

பவுல் மேலும் கூறுகிறார்:

<u>எபேசியர் 2:10</u>

"....நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்..."

"ஆண்கள் மற்றும் பெண்களின் உடைந்த வாழ்க்கையில் இருந்து ஒரு தலை சிறந்ததைப் படைக்க இயேசு மரித்தார்."

நாம் அவரின் கிருபையை விளங்கச் செய்கிறவர்கள் மாத்திரமல்ல, நாம் அவரது செய்கையாயிருக்கிறோம் எனப் பவுல் கூறுகிறார். கிரேக்க சொல் 'பொயிமா' (Poiema) ஆகும். அதிலிருந்து ஆங்கில சொல் பொயம் (Poem) உருவானது. அது ஒரு கலை வண்ணமிக்க தலைசிறந்த படைப்பாகும். முழு உலகிற்கும் தேவனின் படைப்பாற்றலின் முழு தன்மையைக் காண்பிக்கும் தலைசிறந்த படைப்பாக நாம் உள்ளோம்! அது உணர்ச்சி வசப்படவைக்கிறது இல்லையா? அவ்வாறு செய்ய முடியும். அப்படி செய்ய தமது தலை சிறந்த படைபிற்கான பொருட்களுக்காக தேவன் எங்கு சென்றார்? பயனற்ற துண்டுகள் போடுமிடத்திற்கு! அதை உணர்கிறீர்களா? எதையும் எதைக் கொண்டு தேவனால் செய்ய முடியும். அவர் நட்சத்திரங்கள், சூரியன், கடல்கள், மரங்கள் மற்றும் அனைத்தையும் உண்டாக்கினார்; தம்முடைய கிருபையை விளங்கச் செய்யவும் தான் உண்மையில் உண்டாக்கக்கூடியதைக் காண்பிக்கவும் தேவன் கூறினார்: "உடைந்த மனித துகள்களை எடுத்து அதைத் தலைசிறந்த படைப்பாக்கப் போகிறேன்!". ஆண்கள் மற்றும் பெண்களின் உடைந்த வாழ்க்கையிலிருந்து ஒரு தலை சிறந்ததைப் படைக்க

இயேசு மரித்தார். என்ன ஒரு செய்தி! எத்தகைய வெளிப்பாடு!

நீங்கள் இரட்சிப்பைக் குறித்து உணர்ச்சி வசப்படாவிடில், தேவனின் இரட்சிப்பை எவ்வளவு தூரம் அனுபவித்துள்ளீர்கள் என எனக்குத் தெரியாது. நாம் மேலும் கீழும் குதித்து, கைகளைத் தட்டினால், மக்கள் நம்மை 'வெறியர்' என அழைப்பர். நான் கிறிஸ்தவனாகும் முன்பு. ஒரு தர்க்க வல்லுநராக இருந்தேன். இத்தகைய உணர்ச்சி வசப்படுதல் வேத வெளிப்பாட்டின் ஒரு தர்க்க ரீதியான பின் விளைவு என என்னால் கூற முடியும். அமர்ந்தவாறே 'அது நல்லது' எனக்கூறுவது பேதுமானதல்ல, உண்மைக்குரியதுமல்ல.

04 : தேவன் செய்ததை எவ்வாறு சொந்தமாக்குவது

தேவன் நமக்காக வைத்திருப்பதை விவரித்திருக்கிறேன். அது பூரணத்திலும் பூரணம். அது முழுமையிலும் முழுமை. அதை எவ்வாறு நமக்குரியதாக்குவது என்பதை அறிந்து கொள்வதற்காக இருக்கிறது. நான் இத்துடன் நிறுத்தி, உங்களுக்கு மகிமையான தரிசனத்தை விட்டுச் செல்லலாம். ஆனால் உங்களில் பலருக்கு அதற்குள் எவ்வாறு உட்புகுவது என்று தெரியாது. ஆகவே தேவன் செய்து முடித்ததை நமக்கு சொந்தமாக்கிட நாம் செய்ய வேண்டியவற்றைக் கூறப்போகிறேன். என்னுடைய எண்ணத்தில் நான்கு படிகள் உள்ளன. **1)** மனந்திரும்பு, **2)** விசுவாசமாயிரு, **3)** அறிக்கையிடு, **4)** நம்புவதை வாழ்ந்து காண்பி.

மனந்திரும்பு

ஒருவரும் முதல் இன்றியமையாத படியான “மனந்திரும்புதலை” கடந்து செல்ல முடியாது. முழு வேதாகமும் மனந்திரும்புதல் இல்லாமல் தேவனோடு ஒப்புரவாக முடியாது எனத் தெளிவாக்குகிறது. இன்றைய சபையில் மனந்திரும்புதலைக் குறித்த உபதேசம் மிகவும் பலவீனமாயும் பயனற்றதுமாயும் உள்ளது. அதனால் சபை வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது.

நான் திரளான கிறிஸ்தவர்களுக்கு பல்லாண்டு காலமாக ஆலோசனை கொடுத்து வந்துள்ளேன். அதில் 50 சதவீதமான அவர்களின் சிக்கல்கள் மனந்திரும்புதல் இல்லாமையே. மனந்திரும்புதலைத் தவிர வேறு வழியில்லை. இதை வலியுறுத்திக் கூறவேண்டும். மனந்திரும்புதல் எதிர்மறையாக இருப்பதால் அது தேவையற்றது என சிலர் கூறுகின்றனர். அது எதிர்மறையாக இருக்கலாம். ஆனால் நிச்சயமாக அது நமக்குத் தேவை.

மாற்கு 1:15ல் தனது வெளிப்படையான ஊழிய ஆரம்பத்தில் இயேசு அறிவித்தார்.

"மனந்திரும்புதல் ஒரு உணர்ச்சி அல்ல, அது ஒரு தீர்மானம்."

"காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்"

தேவன், புதிய ஏற்பாட்டில், முதலில் மனந்திரும்புதலைக் கூறாமல் விசுவாசிக்கச் சொல்வதில்லை. உண்மையில், நீங்கள் மெய்யாகவே மனந்திரும்பியிருந்தால் தவிர நீங்கள் உண்மையாக விசுவாசிக்க முடியாது. நீங்கள் வெளிப் பிரகாரமான செய்கைகளிலும் விசுவாசத்தின் பல்வேறு தோற்றங்களிலும் ஈடுபடலாம், ஆனால் உண்மை அங்கே இருக்காது. மனந்திரும்புதல் ஒரு உணர்ச்சி அல்ல, அது ஒரு தீர்மானம். கிரேக்க சொல், சமய சார்பற்ற

கிரேக்கத்தில் ''மனதை மாற்றுதல்'' என மொழிபெயர்க்கப்படுகின்றது. மனந்திரும்புதல் உங்கள் மனதை மாற்றுகிறது: நீங்கள் ஒரு வழியில் வாழத் தீர்மானிக்கிறீர்கள். நீங்கள் உங்களையே திருப்தியாக்கி, உங்களது தர நிர்ணயத்தின்படி வாழ்ந்து, உங்கள் காரியங்களையே செய்கின்றீர்கள்; ஆனால் தேவனுக்கு உங்களை அர்ப்பணித்து, அவரது வழியில் வாழத் தீர்மானிக்கிறீர்கள். தேவன் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென உங்களிடம் கூறுவார், நீங்கள் கீழ்ப்படியப் போகிறீர்கள். உண்மையாக மனந்திரும்பியவன் தேவனோடு தர்க்கிக்கமாட்டான்.

தாங்கள் விரும்பியவாறு நடக்கக் கூடியபடி, சில மக்கள் தங்கள் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டுமென விரும்புகின்றனர். தங்கள் வாழ்க்கையில் தாங்கள் எவ்வாறு செயல்பட்டு யாராயிருக்கவேண்டும் எனத் திட்டம் வைத்துள்ளனர். ஆனால் அவர்கள் மனந்திரும்பி தேவ சித்தத்திற்கு தங்களை அர்ப்பணிப்பதில்லை. மனந்திரும்புதல் கூறுகிறது:

''இதோ இருக்கிறேன், கர்த்தாவே. என்னை நீர் விரும்புகிறபடி செய்யும். என்னுடைய ஆசைகளைத் தூரவைத்துவிடுகிறேன். எனக்காக முற்றிலும் வேறுபட்ட திட்டங்களை நீர் வைத்திருக்கலாம். ஆகவே, என்னுடைய ஆசைகளைக் கிழே இறக்கி வைத்து, நீர் என்னை என்ன செய்யச் சொல்கின்றீரோ அதை செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்!" அது தான் மனந்திரும்புதல்.

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின், தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்த வேதப்பகுதிகளைத் தமது சீஷர்களுக்கு விளக்கினார். லூக்கா **24:46**ல் அவர் கூறினார்:

> *''எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் ...அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது"*

முதலில் பிரசங்கிக்க வேண்டியது என்ன ? பாவமன்னிப்பு அல்ல, மனந்திரும்புதல் நாம் மனந்திரும்புதலை விட்டுவிட்டு மக்களுக்கு பாவமன்னிப்பை அறிவிக்க உரிமை இல்லை.

தென்கிழக்கு ஆசியாவில் ஒரு கூட்டத்தில் நான் சென்றபோது, குணமாக்குதல் குறித்து ஒரு ஊழியர் ஓர் மிகச் சிறந்த செய்தியைப் பிரசங்கித்தார். தேவனுடைய வார்த்தையின் மூலம் எவ்வாறு சுகத்தைப் பெறலாம் என்பதைக் குறிப்பிட்டார். அந்த செய்தி என்னையும் ஆசீர்வதித்தது. முடிவில் அந்தக் கலப்பு மக்கள் கூட்டத்திற்கு அவர் கூறினார்: ''இந்த அற்புதமான வாழ்வையும் அனைத்து ஆசீர்வாதங்களையும் நீங்கள் பெறவிரும்பினால் முன்பாக வந்து பெற்றுக்கொள்ளுங்கள்'' அவர் மனந்திரும்புதல் என்ற சொல்லைத் தன் செய்தியில் ஒரு இடத்திலும் சொல்லவில்லை. விக்கிரகாராதனைக்காரர்கள் அநேகர் முன்னே வந்தனர். ஆனால் அவர்கள் தேடிய சுகத்தைப் பெறவில்லை விளைவு குழப்பமே.

தெளிவாக மனந்திரும்புதல் என்ற நிபந்தனையை அவர்கள் செயல்படுத்தவில்லை. அது அவர்கள் பிழை அல்ல. ஏனெனில் அந்த நிபந்தனை அவர்களிடம் கூறப்படவில்லை. வேதஅறிவு பின்னணியைப் பெற்றுள்ள நாம், மனந்திரும்ப வேண்டும் என்ற நிபந்தனையை மக்கள் அறிவார்கள் என்று எண்ணலாம். ஆனால், பல கலாச்சாரங்களில், உண்மையான மனந்திரும்புதல் தங்களைத் தாங்களே துன்புறுத்துவதாக இருக்கலாம். தூய பேதுருவின் படிகளில் முழங்காலில் நின்று ஏறுவதாகவும், தங்களை கசையால் அடித்துக் கொள்வது போன்றவையாகும். ஆனால், மனந்திரும்புதல் உங்களையே துன்புறுத்துவதல்ல. நமக்காக இயேசுவே அனைத்து பாடுகளையும் சகித்தார். மனந்திரும்புதல் மாறுவதற்கும் மாற்றப்படுவதற்கும், நீங்கள் உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கும் அனைத்தையும் விட்டுவிட்டு "தேவனே, நான் உமது கையாட்சியில் வருகிறேன்" என்று கூறுவதேயாகும்.

பெந்தேகோஸ்தே என்ற **50**வது நாளிலே, பரிசுத்த ஆவியானவர் இறங்கிய போது, திரளான மக்கள் பாவ உணர்வினால் குத்தப்பட்டார்கள். என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே அப்போஸ்தலர் **2:37**ல் அவர்கள் அப்போஸ்தலரைக் கேட்கின்றனர். "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்**?**" பேதுரு அவர்களுக்கு மூன்று படிகள் உள்ள ஒரு பதிலை கூறுகின்றார்.

"மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின்

வரத்தைப் பெறுவீர்கள்" *(அப். 2:38).*

முதல் தேவை என்ன ? மனந்திரும்புதல். அதுவே இப்பொழுதும் தேவனுடைய பதிலில் முதல் அடியாகும். ஆனால் அது தவணை முறையில் அல்ல அது ஒரு தொகுப்பு பங்குமுறை. அவை அனைத்தையும் ஒரே சமயத்தில் செயலாற்ற வேண்டும்: மனந்திரும்புங்கள், ஞானஸ்நானமெடுங்கள் மற்றும் பரிசுத்த ஆவியைப் பெறுங்கள்.

அப்போஸ்தலர் 20ஆம் அதிகாரத்தில் பவுல் எபேசுவின் மூப்பர்களுடன் தனது ஊழியத்தைக் குறித்து பேசுவதைக் காணலாம். 20-21ஆம் வசனங்களில் கூறுகிறார்.

> *"பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல் வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும் நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்."*

அவர்கள் கிரேக்கரோ, யூதரோ என்பது பொருட்டமல்ல. ஒழுங்குமுறை, முதலில் தேவனிடத்தில் மனந்திரும்புதல், பின்பு இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்தல் ஆகும்.

விசுவாசித்தலும் அறிக்கையிடுதலும்

அறிக்கையிடுதலை, விசுவாசத்தின் முன் வைப்பதா அல்லது விசுவாசத்தை அறிக்கையிடுதவன் முன் வைப்பதா என எனக்குத் தெரியாது. புதிய ஏற்பாட்டில் இரண்டையும் பிரிக்க

முடியாது. இரட்சிப்புக்கான நிபந்தனைகளை பவுல் ரோமர் **10:8-13**இல் விவரிக்கிறார். அவர் இரு காரியங்களைப் பற்றிக் கூறுகிறார்: வாய் மற்றும் இருதயம். இரு முறை வாயை இதயத்துக்குமுன் வைக்கிறார். மூன்றாம் முறை இதயத்தை வாய்முன் வைக்கிறார். நாம் இவ்வாறு நினைப்பதில்லை. ஆனால் ஒரு வகையில், ஏதாவது ஒன்றைக் கூறுவதன் மூலம் விசுவாசத்தை அடைகிறோம்.

ஆங்கில வழக்கத்தில் இருதயத்தில் (By Heart) கற்றுக்கொள் என்பது எபிரேயத்தில் வாயினால் கற்றுக்கொள் என்று கூறுப்படுவது ஒரு சுவையான உண்மையாகும். உன் இதயத்தில் ஏதேனும் ஒன்றை விரும்பினால், வாயினால் அதைச் சொல்லிக் கொண்டே இரு! எதிர்மறையாக, உன் இதயத்தில் ஏதேனும் இருப்பின், நீ பேசுவதில் அது வெளியாகும் - இயேசு கூறினார். “இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்” (மத்தேயு 12:34). ஒவ்வொன்று விசுவாசித்தலும் அறிக்கையிடுதலுமான முழு செயலின் ஒரு பகுதியாகும். நீங்கள் ஒன்றை விசுவாசிப்பீர்களானால், நீங்கள் அதை அதிகமாக சரியென்பீர்கள், அதை இன்னும் அதிகமாக விசுவாசிப்பீர்கள்; இன்னும் விசுவாசித்தால் மேலும் அதை அறிக்கையிடுவீர்கள். மாறாக, நீங்கள் விசுவாசிப்பதை அறிக்கையிடாவிட்டால்,

"இதயத்தில் ஏதேனும் ஒன்றை விரும்பினால், வாயினால் அதைச் சொல்லிக் கொண்டே இரு!."

அதை விசுவாசிப்பதை விட்டுவிடுவீர்கள், விசுவாசிப்பதை விட்டுவிட்டால், அறிக்கையிடுவதையும் விட்டு விடுவீர்கள்.

அறிக்கை என்ற சொல் “அதேயே திரும்பக் கூறுதல்” எனப்பொருள்படும். தேவனுடைய வார்த்தையில் அவர் கூறியிருப்பதைச் சொல்வது வேதாகம அறிக்கையிடுதலாகும். அது உங்கள் வாயின் வார்த்தைகளை தேவனுடைய வார்த்தைகளுக்கு ஒத்திருக்கச் செய்வதே ஆகும். இரட்சிப்பின் செயல்முறைக்கு இது மிகவும் இன்றியமையாதது. சரியான அறிக்கையில்லாமல் உண்மையாகவே இரட்சிப்பை அனுபவிக்க முடியாது. ரோமர் **10:8-9**ல் பவுல் கூறுவதைப் பாருங்கள்.

> *இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே. என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை (இயேசுவைக் கர்த்தரென்று)–நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று, உன் இருதயத்திலே விசுவாசித்தால், இரட்சிக்கப்படுவாய்.*

முதலில் நாம் செய்ய வேண்டியதென்ன ? வாயினாலும் அறிக்கையிடுகிறோம். நமது இருதயத்திலும் விசுவாசிக்கிறோம். நாம் நினைப்பது போல் அல்ல, அனுபவத்தில் அதுவே உண்மை.

வசனம் **10**ல் மீண்டும் மூன்றாம் முறை அவர் வாயையும் இதயத்தையும் குறிப்பிடுகிறார். பவுல் கூறுகிறார். “நீதியுண்டாக

இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்."

ஒழுங்காக ஆலயத்துக்குச் செல்லும் மக்கள் மத்தியில் பிரிட்டனில் நான் வளர்ந்தேன். அவர்களில் பலர் ஐயமின்றி, உண்மையில் இரட்சிக்கப்பட்டவர்கள். ஆனால், அவர்களில் ஒருவரும் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்று எனக்குக் கூறவில்லை. அந்நாட்களில் உள்ள மக்களுக்கு மதம் தனிப்பட்டது என்றும் அதைக்குறித்து பேசுவதில்லை என்பர், ஆனால் சுவிசேஷத்திற்கு அவ்வாறு இருக்கக் கூடாது. நாம் அதைக் குறித்து பேச வேண்டும். நாம் விசுவாசித்து அறிக்கையிடுகிறோம், நாம் அறிக்கையிட்டு விசுவாசிக்கிறோம்.

எபிரெயர் நூலில், நாம் அறிக்கையிடும் இயேசுவைக் குறித்து **3** பகுதிகள் உள்ளன. முதலில், மூன்றாம் அதிகாரம் முதல் வசனம் கூறுகிறது:

> *''இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்."*

இயேசு, தேவனால் இரட்சிப்பை அளிக்கும்படியாக அனுப்பப்பட்ட அப்போஸ்தலர் ஆவார். இரட்சிப்பை வழங்கியபின் தேவ சமூகத்தில் நமது பிரதான ஆசாரியராயிருக்கும்படித் திரும்பிச் சென்றார். நாம் அறிக்கையிடும் பிரதான ஆசாரியர்

என்று கூறப்பட்டுள்ளது. ஒரு வகையில், இங்கு பூமியில் நமது உதடுகளை நாம் மூடிக் கொண்டிருப்போமானால், பரலோகத்தில் உள்ள நமது வக்கீலைப் பேசவிடாமல் செய்துவிடுவோம். நாம் எவ்வளவுக்கு அதிகமாக அறிக்கை செய்கிறோமோ, அந்த அளவு நமக்காக நமது பிரதான ஆசாரியரின் ஊழியத்திற்கு விடுதலையாக்குகிறோம்.

எபிரெயர் **4:14** சொல்கிறது.

> *"வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம்."*

'அறிக்கையை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம்' என்ற அறிக்கையைக் கவனியுங்கள். அந்த அறிக்கையை சொல்லவும், தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருக்கவும், பின்வாங்காமலும் ஊக்கம் தளராமலும் இருக்க வேண்டும் எனப் பொருள்படும்.

இறுதியாக, எபிரெயர் **10:21-23**ஐப் பார்ப்போம்.

> *"தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினால், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக்கடவோம்;*

வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே."

"நாம் விசுவாச அறிக்கையை நெடுங்காலமாக செய்து வந்தால், அது நம்பிக்கையாக ஆகிறது."

இந்த பகுதி நமது விசுவாசத்தின் அறிக்கையைக் குறித்து பேசவில்லை; அது நமது வருங்கால நம்பிக்கையின் அறிக்கையைக் குறித்தது. நாம் விசுவாச அறிக்கையை நெடுங்காலமாக செய்து வந்தால், அது நம்பிக்கையாகிறது. ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்..." (எபிரெயர் **11:1**). நாம் விசுவாசத்தின் மேல் கட்டியிருப்போமானால், நம்பிக்கை வருகிறது (வேதத்தின்படி நம்பிக்கை என்பதன் என்னுடைய விளக்கம் "நன்மை வருமென்ற எதிர்ப்பார்ப்புடன்கூடிய முழு நம்பிக்கை."

முதல் பகுதியில் நமது அறிக்கை இயேசுவே பிரதான ஆசாரியர் என்று பார்த்தோம். பின் நமது அறிக்கையை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டுமெனக் கற்றோம். இறுதியாக அலைவு இல்லாமல், அதை உறுதியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. அலைவில்லாமல் என்பது எதைக் குறிக்கிறது? ஒரு சிறிய எடுத்துக்காட்டின் மூலம் விளக்குகிறேன். நீங்கள் ஆகாய விமானத்தில் பயணம் செய்யும் போது, ''உங்கள் இருக்கையின் பெல்ட்டை அணியுங்கள்" என்று அறிவிப்பு வந்தால், அது உங்களுக்கு

என்ன சொல்கிறது ? கொந்தளிப்பை எதிர்பாருங்கள் ! அலை வில்லாமல் என்பது நமக்கு என்ன கூறுகிறது ? எதிர்ப்பை எதிர்பாருங்கள் ! இங்கு தான் நமது அறிக்கையைக் குறித்த யுத்தம் நடக்குமிடம்.

நாம் சரியான அறிக்கையை வெளியிடும்போது, நம்மை எதிர்க்கும் ஒரு இருண்ட, கெட்ட சக்தி உள்ளது; அது நம்மை எதிர்த்து நமது வாய்களை மூட விரும்புகிறது. நாம் நமது சித்தத்தைப் பயன்படுத்தி, நமது வாய்களைத் திறந்து சரியான காரியத்தைப் பேச வேண்டும். சாத்தான் ஒவ்வொரு வகையான அழுத்தத்தையும், ஒவ்வொரு வகையான தூண்டுதலையும் நம்மை எதிர்க்க பயன்படுத்துவான். நாம் ஒரு தவறான அறிக்கை செய்யும்படி, அவனால் முடிந்த ஒவ்வொரு வகையான பொய்யைப் பயன்படுத்துவான். அவனை எப்படித் தோற்கடிக்க முடியும் ? சரியான அறிக்கையைத் தொடர்ந்து செய்வதன் மூலமே.

விசுவாத்தில் வாழுங்கள்

ஒரு முறை நீங்கள் மனந்திரும்பி, விசுவாசித்து அறிக்கையிடும்போது, செய்ய வேண்டிய கிரியை மேலும் ஒன்று உள்ளது. உங்கள் விசுவாசத்தை செயலில் காட்ட வேண்டும். யாக்கோபு **2:26** கூறுகிறது: “கிரியையில்லாத விசுவாசம் செத்தது” தகுந்த செயல்களினால் வெளியரங்கப்படாத விசுவாசம் ஒரு செத்த விசுவாசம் ஆகும். நமது விசுவாசத்தை வெளிப்படுத்தும் மூன்று தகுந்த செயல்களை உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்.

ஞானஸ்நானம் பெறுங்கள்

இயேசுவை இரட்சகராக வெளியரங்கமாக இணைக்கும் முதல் தருணம் ஞானஸ்நானம் ஆகும். மாற்கு **16:15-16**ல் இயேசு கூறினார்:

> *''....நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்: விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"*

அப்போஸ்தலர் நடபடிகளை நீங்கள் படித்தால், ஞானஸ்நானம் பெறாமல் யாரும் இரட்சிப்பை ஒரு போதும் கேட்கவில்லை. ஆதித்திருச்சபை அதற்கு அவசர முக்கியத்துவத்தை அளித்தது. நாம் ஞானஸ்நானம் பெறும்வரை இரட்சிப்பை சுதந்தரித்துக் கேட்க நமக்கு உரிமையுண்டு என்று நான் நம்பவில்லை. நாம் மறுபிறப்பு அடைந்திருக்கலாம். ஆனால் இரட்சிப்பிற்குள் உண்மையாகவே உட்புகுந்துள்ளோம் என நான் நம்பவில்லை. உயிர்த்தெழுந்த வாழ்க்கைக்குள் இயேசு உட்புகுந்த வழியைத் தவிர - அடக்கம் பண்ணப்படும் வழி, கல்லறையின் வழி - வேறு வழியில் உட்புக நமக்கு உரிமை இல்லை. அது தெளிவானது.

காசா செல்லும் பாதையில் பிலிப்பு மந்திரியை வழிநடத்திய பொழுது, பாதையில் அநேக தண்ணீர் இருந்தது, அந்த மந்திரி

கூறினார்: நான் ஞானஸ்நானம் பெறத் தடை என்ன ? இதைக் கேட்டது பிலிப்பு அல்ல. மந்திரியே கேட்டார், ஞானஸ்நானத்தின் அவசியத்தை பிலிப்பு ஏற்கனவே அவருக்கு விளக்கியுள்ளார். ஆகவே பிலிப்பு தண்ணீரில் இறங்கி அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

பிலிப்பி பட்டணத்தில், சிறைச்சாலையில் பவுலும் சீலாவும் இருந்தபோது (அப் 16:23-24), ஒரு பூமியதிர்ச்சி ஏற்பட்டு, அனைவரும் விடுதலையானார்கள். சிறைச்சாலை அதிகாரி இரட்சிக்கப்பட விரும்பியபோது என்ன நடந்தது ? அதே இரவிலேயே அவனும் அவன் வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். காலை வரை அவர்கள் காத்திருக்கவில்லை அநேகப் போதகர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறேன்: மூன்று வாரங்கள் கழித்து ஞானஸ்நான ஆராதனை நாங்கள் வைத்துள்ளோம் உங்கள் பெயரைக் கொடுங்கள்! ஆனால் அது புதிய ஏற்பாட்டு வழக்கமல்ல மாறாக அது “மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறுங்கள்”, என்று இருக்கிறது.

என்னுடைய வாழ்க்கையில் கிளர்ச்சியூட்டும் பல கூடுகைகளில், மக்கள் விசுவாசித்து, உடனடியாக ஞானஸ்நானம் பெற்றதைக் கண்டிருக்கிறேன். பல தரப்பட்ட மக்கள் ஞானஸ்நானம் பெற்ற ஒரு நீச்சல் குளத்து கூடுகை என் மனதில் வருகின்றது. வேடிக்கை பார்ப்பதற்காக அங்கு வந்த பாப்டிஸ்டு குழுவினர் அங்கு இருந்தனர். அப்பொழுது

தேவ பிரசன்னம் பலமாக இறங்கினது! அந்த வழியில் பெற்றுக் கொள்ள அந்த அருமை பாப்டிஸ்டுகள் விரும்பினர்! சபையின் நாட்காட்டியில் ஞானஸ்நானத்தை ஒரு சடங்கைபோல வைப்பது, ஈஸ்டர் என்ற உயிர்த்தெழுந்த நாளன்று இரட்சிப்பை பெறுவது போலாகும். அதன் உண்மையான முக்கியத்துவத்திலிருந்து அதை வேறுபிரிக்கின்றது.

சுவிசேஷத்தினால் மனந்திரும்பி, விசுவாசித்த போது முதலாவது நீங்கள் செய்ய வேண்டியது ஞானஸ்நானம் பெறுவதேயாகும். உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கூடிய ஒருவரைக் கண்டு பிடியுங்கள்! “வாலிபருக்கு ஊழியம் என்ற பல்கலைக் கழகத்தில் நான் ஒரு முறை கற்றுக்கொடுக்கும்போது, நான் சொன்னேன் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள்!” ஆனால் எந்த முறையில் என்று நான் கூறவில்லை. பிறகு, மக்கள் என்னிடம் கூறினார்கள். “நான் இப்போதே ஞானஸ்நானம் பெற விரும்புகிறேன்” அங்கிருந்த பேராசிரியர் ஒருவர் “இது உன்னுடைய பிரச்சனை நீ அவர்களை எடுத்துக்கொள்...” என்றார். நாங்கள் நேரடியாக நீச்சல் குளத்துக்குச்சென்று அந்த இரவு நேரத்திலேயே அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

"நன்றி செலுத்துவதில் எல்லையற்ற வலிமை உள்ளது."

உணர்ச்சிவசமாக சுவிசேஷம் இல்லாவிடில், நாம் எதையோ இழந்திருக்கிறோம் என

நினைக்கிறேன். இது போன்ற செயல் இல்லாவிட்டால், அதிக விசுவாசமில்லை என்றுதான் எண்ணுகிறேன்.

ஸ்தோத்திரம் செய்யுங்கள்

இரண்டாவதாக, நமது விசுவாசத்தை வெளிப்படுத்துவது நன்றி சொல்லுதல் மூலம் நிச்சயமாக, ஞானஸ்நானம் பெறுமுன் இதை நீங்கள் செய்யலாம்! விசுவாசத்தின் தூய்மையான வெளிப்பாடு தேவனிடத்தில் "நன்றி" என்று சொல்வதேயாகும்.

நான் இங்கு கற்பிப்பதை நீங்கள் உண்மையாகவே நம்புவீர்களானால், நீங்கள் இப்போதே தேவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருப்பீர்கள். இல்லாவிடில்! நீங்கள் ஒரு அவிசுவாசியோ, ஒரு மிகுந்த நன்றியில்லாத நபரோ, அல்லது விசுவாசிக்க காலம் தாழ்த்துபவரேயாகும்.

இயேசுவின் சில அற்புதங்கள் ஸ்தோத்திரம் செய்வதன் மூலமே செய்யப்பட்டன. **5000** (ஆண்கள் மட்டும்) பேருக்கு உணவளித்தபோது, இயேசு தமது பரலோகத் தந்தையிடம் "ஸ்தோத்திரம்" என்று மட்டுமே கூறினார். ஏறக்குறைய **10,000** பேருக்கு உணவளிக்கக் கூடியதாக **5** அப்பங்களும் **2** மீன்களும் போதுமானதாயிற்று. நன்றி செலுத்துவதில் எல்லையற்ற வலிமை உள்ளது. மீனின் வயிற்றில் யோனா மூன்று இராப்பகல் இருந்தார். அவர் மிகுதியாக ஜெபித்தும், ஜெபித்த உடனே வெளியே வரவில்லை. மாறாக, யோனா **2:9**ன்படி, அவர் நன்றி செலுத்தத் தொடங்கியவுடன், அந்த மீனால் அவரை உள்ளே வைத்திருக்க முடியவில்லை. நீங்கள்

இன்று இத்தகைய மீனின் வயிற்றில் இருந்தால், நன்றி செலுத்த ஆரம்பியுங்கள்!

பரிசுத்த ஆவியால் வழி நடத்தப்படுங்கள்

இந்த செயல்களின் பட்டியலை முடிக்க, நாம் ரோமர் **8:14**ஐப் பார்ப்பது அவசியம். அது கூறுகிறது.

> *''எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்."*

ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரேயொரு திட்டத்தை வைக்கவில்லை. உங்கள் வாழ்க்கைக்கான திட்டத்தைப் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துவார். மற்றொரு விசுவாசியைப் பின்பற்றி நடக்காதீர்கள், ஏனேனில் உங்களுக்காக மட்டும் தேவன் ஒரு திட்டம் வகுத்துள்ளார்.

எளிமையாக இருந்தும் இலகுவாக இல்லாததன் காரணங்கள்

''என்னிடத்தில் ஏதோ தவறு உள்ளது'' என்று உங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டிருப்பீர்களானால், அது இலகுவாகத் தோன்றினாலும் அது உங்களுக்கு இலகுவாக இல்லாதிருப்பதாலும், எனது குறிப்பு இது தான். இரட்சிப்பை சொந்தமாக்கி கொள்வது எளிது ஆனால் இலகுவல்ல. வேறுபாட்டை கவனித்தீர்களா? ஏன் இலகுவல்ல என்பதற்கு மூன்று எதிரிகள் உள்ளனர், அதுதான் கடினமாக்குகிறது.

மாம்சம் அல்லது மாம்ச சிந்தை

பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு, நாம் போராடும் முக்கிய யுத்தங்கள் நமது சிந்தைகளில் உள்ளன. அது சரியல்லவா? நமக்குள்ளே ஒரு எதிரி இருக்கிறான். வேதம் அவனை மாம்சம் என்று அழைக்கிறது. மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்ச சிந்தையுள்ளவர்கள் - புதுப்பிக்கப்படாத மனதையுள்ளவர்கள். ரோமர் **8:7-8**ல் பவுல் கூறுகிறார்: ''மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை, அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்." இந்த எதிரி தேவன் நாம் செய்ய வேண்டுமென்று விரும்புவதற்கு எதிரிடையாயிருக்கிறான். தேவனுடைய சித்தத்திற்கு நமது சிந்தைகளைக் கீழ்ப்படிய செய்ய வேண்டும். **2** கொரிந்தியர் **10:3-5**ல் பவுல் கூறுகிறார்: ''நம்முடைய போராயுதங்கள் ...எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறோம் என்ற தேவ பலமுள்ளவையாயிருக்கின்றன.'' சிறைப்படுத்துகிறோம் என்பதற்கான சொல் ஒரு சாதாரண கைதியைக் குறிக்காமல், ஒரு போர்க் கைதியையே குறிக்கிறது. வேறு சொற்களில், இயற்கையாகவே நமது சிந்தைகள் தேவனுக்கு விரோதமானவை, ஆகவே அவைகளை நாம் சிறைபிடித்து வலுக்கட்டாயமாக தேவனுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டும்.

சாத்தான்

சாத்தான் என்று அழைக்கப்பட்டு நம்மை எதிர்க்கும் ஒரு எதிரி இருக்கிறான். 1 பேதுரு 5:8-9ல், பேதுரு கூறுகிறார்: ''..உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்", என்பது தொடர் நிகழ்காலத்தில் உள்ளது. பிசாசுடன் ஒரு முறை அவ்வாறு செய்வது போதுமானதல்ல. அவனை நாம் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். யாக்கோபு ''நாம் முதலில் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்; பின் பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும்" என்கிறார் (யாக்கோபு 4:7). அதன்பின் என்ன நடக்கும்? அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்! ஆனால் சாத்தான் விடாக்கண்டன். அவன் உண்மையிலேயே அவ்வாறு செய்ய விழைகிறோம் என்பதை அவனுக்கு உறுதியாக்க வேண்டும். 4 அல்லது 5 வெவ்வேறு யுக்திகளை அவன் பயன்படுத்தியபின் அவன் விட்டு விடுவான்.

உலகம்

இறுதியாக, ''உலகம்" என்று வேதத்தால் அழைக்கப்படும் ஒரு எதிரான சூழ்நிலையில் நாம் வாழ்கிறோம். உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்பட வேண்டாம் என்று இயேசு தமது சீடரிடம் கூறினார். அவர் சொன்னார் ''உலகம் உங்களைப் பகைப்பதற்கு முன்னே என்னைப் பகைத்தது"

(யோவான் 15:18) அதன்பின் 19ஆம் வசனத்தில் ஐந்து முறை "உலகம்" என்ற வார்த்தையை பயன்படுத்தினார். "நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது". இயேசு கிறிஸ்து எனும் தேவத்துவத்தின் நபரின் வாயிலாக தேவனுடைய நீதியுள்ள அரசாட்சிக்குத் தன்னை சமர்ப்பிக்காத எந்த நபரும், உலகம் என்ற பிரிவில் இருக்கிறார். உலகமும் சபையும் வெவ்வேறாகத் தனிப்பட்டிருக்க வேண்டும். உலகம் சபைக்குள் புகும்பொழுது சபைக்கு மிக அதிகமான சிக்கல் ஏற்படுகிறது. அங்குதான் நமது சிக்கல்கள் ஆரம்பிக்கின்றன. ஆகவே, நாம் எதிர் கொள்ள வேண்டிய மூன்று சக்திகள் உள்ளன: அவை உலகம், மாம்சம், பிசாசு அதனால்தான் அது எளிமையாகவும் ஆனால் இலகு இல்லாமலும் இருக்கிறது. ஆனால், நாம் தொடர்ந்து முன்னேறுவோம். தேவன் இயேசு கிறிஸ்து மூலம் அருளிச் செய்த முழுமையான இரட்சிப்பில் முற்றிலுமாக வாழ அதிகமதிகமாய் கற்றுக்கொள்வோம்!

ஆசிரியரைப் பற்றி . . .

டெரிக் பிரின்ஸ் (1915-2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் ஃபெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரெய பல்கலைக்கழகத்தில் எபிரெய மற்றும் அராமிய மொழிகளை உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய போது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்த சந்திப்பில் இருந்த அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார். முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார். இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும், கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபை பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது போதனையை அனைத்து இன மற்றும் மத பின்னணியிலிருந்தும்

மக்களுக்குச் சமமாக பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார். அவற்றில் பல, 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷின், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது. "இயேசு திரும்பும் வரை" தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மணி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது.

இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப் பற்றிய தற்போதைய தகவலுக்கு, இங்கு செல்க : **www.derekprince.com**

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் மேலும் விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

For orders, prayer requests & other enquiries please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

You can also send your offerings and contributions towards this ministry to the above address.

Visit our WEBSITE:

www.derekprince.com/ta-in